# இந்திய சுதந்திரப் போராட்டம் - பாடத்திட்டம்

இந்தியாவிற்கு ஐரோப்பியர் வருகை - கர்நாடகப் போர்கள் - மைசூர் போர்கள் - ஆங்கிலேயர் ஆதிக்கம் - இராபர்ட் கிளைவ் முதல் கானிங் பிரபு வரை - முதல் இந்திய சுதந்திரப்போர் - விக்டோரியா மகாராணி பேரரறிக்கை - இந்திய தேசிய காங்கிரஸ் தோற்றம் - மிதவாதிகள் - தீவிரவாதிகள் - வங்கப்பிரிவினை - முஸ்லீம் லீக் கட்சி தோற்றம் - சூரத் பிளவு - வங்கம் மீண்டும் இணைதல் - தன்னாட்சி இயக்கம் - லக்னோ மாநாடு - ரௌலட் சட்டம் - ஜாலியன் வாலாபாக் படுகொலை - கிலாபாத் இயக்கம்

## ஐரோப்பியர்களின் வருகை :

யாருடைய வருகையால் இந்தியாவிற்கும், ஐரோப்பிய நாடுகளுக்கும் இடையே இருந்த வாணிபத் தொடர்பு மேலும் வலுவடைந்தது? = அலெக்ஸாண்டர்

இந்தியாவிலிருந்து ஐரோப்பிய நாடுகளுக்கு ஏற்றுமதியாயின சில பொருட்களைக் கூறுக? = மிளகு, மிளகாய், இஞ்சி, பட்டை, தேங்காய், சர்க்கரை, சாயப் பொருட்கள், பட்டு, நறுமணப் பொருட்கள் மற்றும் மஸ்லின் கைத்தறி ஆடை

இந்தியாவிலிருந்து வியாபார பொருட்கள் அனைத்தும் ஐரோப்பிய நாடுகளுக்கு எத்தனை முக்கிய வழித்தடங்களில் ஏற்றுமதி செய்யப்பட்டன? = 3 முக்கிய வழிகளில்

மூன்று முக்கிய வழித்தடங்கள் யாது?

1) ஆப்கானிஸ்தான் - மத்திய ஆசியா, மற்றும் காஸ்பியன் கடல்வழியாக கருங்கடல் தரைப்பகுதி வரை

2) பாரசீகம் மற்றும் சிரியா வழியாக மத்திய தரைக்கடல் பகுதியில் அமைந்துள்ள அலெக்ஸாண்டிரியா வரை

3) அரபிக்கடல், பாரசீக வளைகுடா மற்றும் செங்கடல் வழியாக கடல்மார்க்கம்

ஆட்டோமானிய துருக்கியர்கள் காண்ஸ்டாண்டிநோபிள் நகரத்தை கைப்பற்றிய ஆண்டு எது? = கி.பி 1453

துருக்கியர்கள் காண்ஸ்டாண்டிநோபிள் நகரத்தை கைப்பற்றி யாருக்கு இடையூறு தந்தனர்? = ஐரோப்பிய வணிகர்கள்

துருக்கியர்கள் கான்ஸ்டாண்டி நோபிள் கைப்பற்றியதன் விளைவாக ஐரோப்பியருக்கு எதன் வழியாக நடைபெற்ற வாணிபத்திற்கு துருக்கியர்கள் தடைவிதித்தனர்? = ஆப்கானிஸ்தான்

யாருடைய படையெடுப்பின் விளைவாக பாரசீகம் மற்றும் அரபிக்கடல் வழியாக நடைபெற்ற வாணிகமும் ஐரோப்பியர்களுக்கு தடைபட்டது? = அராபியர்கள்

எந்த நூற்றாண்டின் போது ஐரோப்பியர்களுக்கு அராபியர் படையெடுப்பினால் பாரசீகம் மற்றும் அரபிக்கடல் வழியாக நடைபெற்ற வாணிபம் தடைபெற்றது? = கி.பி 8 ஆம் நூற்றாண்டு

## போர்ச்சுகீசியர்கள் :

இந்தியாவிற்கு புதிய கடல் வழி கண்டுபிடிக்கும் முயற்சியில் முதலில் இறங்கியவர்கள் யார்? = போர்ச்சுகீசியர்கள்

மாலுமிகளுக்கு பயிற்சி அளிக்க அறிவியல் முறையில் அமைந்த பள்ளி ஒன்றை தொடங்கிய மன்னர் யார்? = போர்ச்சுகீசிய இளவரசர் ஹென்றி

இளவரசர் ஹென்றியின் சிறப்பு பெயர் யாது? = மாலுமி ஹென்றி

இளவரசர் ஹென்றி எந்த காரணத்தில் மாலுமி ஹென்றி என்ற சிறப்பு பெயரால் அழைக்கப்பட்டு போற்றப்பட்டார்? = கடல் பயணத்தின் மீது இருந்த ஆர்வத்தின் காரணமாக

## பார்த்தலோமியோ டயஸ் :

முதன்முதலில் கடல் பயணத்தினை மேற்கொண்டவர் யார்? = போர்ச்சுகல் நாட்டை சேர்ந்த பார்த்தலோமியோ டயஸ்

எந்த ஆண்டின் போது பார்த்தலோமியோ டயஸ் முதன் முதலில் கடல் பயணத்தினை மேற்கொண்டார்? = கி.பி 1487

பார்த்தலோமியோ டயஸ் கடல் பயணத்தின் போது இறுதியாக சென்ற இடம் எது? = ஆப்பிரிக்காவின் தென்கோடி முனை

ஆப்பிரிக்காவின் தென்கோடி முனைக்கு 'புயல் முனை' என்று பெயரிட்டவர் யார்? = பார்த்தலோமியோ டயஸ்

'நன்னம்பிக்கை முனை' என்று அழைக்கப்படும் இடம் எது? = ஆப்பிரிக்காவின் தென்கோடி முனை

## வாஸ்கோடகாமா :

எந்த ஆண்டு போர்ச்சுகீசிய மாலுமியான வாஸ்கோடகாமா அவர்கள் நன்னம்பிக்கை முனையை கடந்து இந்தியாவின் மேற்கு கடற்கரையில் அமைந்துள்ள கோழிக்கோடு என்று அழைக்கப்படும் கள்ளிக்கோட்டையை வந்தடைந்தார்? = கி.பி 1498, மே - 17

கள்ளிக்கோட்டையில் வாஸ்கோடகாமாவை வரவேற்ற மன்னர் யார்? = சாமரின்

கி.பி.1500 ஆண்டு இந்தியாவிற்கு வந்த போர்ச்சுகீசியர் யார்? = பெட்ரோ அல்வரிஸ் காப்ரல்

இரண்டாவது தடவையாக வாஸ்கோடகாமா இந்தியா வந்த ஆண்டு எது? = கி.பி.1502

போர்ச்சுகீசியர்கள் இந்தியாவின் மேற்கு கடற்கரை பகுதியில் எந்த இடங்களில் தன் வாணிபத்தளங்களை அமைத்து வியாபாரத்தில் ஈடுபட்டனர்? = கள்ளிக்கோட்டை, கொச்சின், கண்ணணூர் ஆகிய இடங்களில்

போர்ச்சுகீசியர்கள் இந்தியாவுடன் வாணிபம் நடத்த அனுமதி வழங்கிய மன்னர்? = சாமரின்

### பிரான்சிஸ்கோ-டி-அல்மெய்டா - (கி.பி 1505 - கி.பி 1509) :

இந்தியாவில் போர்ச்சுகீசியர்களின் வாணிபத்தை கவனிக்க முதல் ஆளுநராக நியமனம் செய்யப்பட்டவர் யார்? = பிரான்சிஸ்கோ-டி-அல்மெய்டா

அரேபிய வியாபாரிகளைத் தோற்கடித்து போர்ச்சுகீசியரின் ஆதிக்கத்தை நிலைநாட்டியவர் யார்? = பிரான்சிஸ்கோ-டி-அல்மெய்டா

பிரான்சிஸ்கோ-டி-அல்மெய்டா அவர்களின் கொள்கை யாது? = நீலநீர்க் கொள்கை

நீலநீர்க் கொள்கை மூலம் போர்ச்சுகீசியர்களின் குடியேற்றப் பகுதிகளை தன் முழுக்கட்டுப்பாட்டில் கொண்டு வந்த ஆளுநர்? = பிரான்சிஸ்கோ-டி-அல்மெய்டா

பிரான்சிஸ்கோ-டி-அல்மெய்டா அவர்கள் இறந்த ஆண்டு எது? = கி.பி 1509

பிரான்சிஸ்கோ-டி-அல்மெய்டா அவர்கள் யாரால் கொல்லப்பட்டார்? = எகிப்தியர்

### அல்போன்ஸே-டி-அல்புகர்க் :

போர்ச்சுகீசியரின் இரண்டாவது ஆளுநராக பதவியேற்றவர் யார்? = அல்புகர்க்

அல்புகர்க் அவர்கள் கோவாவை கைப்பற்றிய ஆண்டு எது? = கி.பி 1510

அல்புகர்க் எந்த மன்னரிடமிருந்து கோவாவை கைப்பற்றி அதனை போர்ச்சுகீசியர்களின் வாணிப தலைநகரமாக மாற்றினார்? = பீஜப்பூர் சுல்தான்

அல்புகர்க் அவர்கள் எந்த பேரரசுடன் தனது உறவை பலப்படுத்திக் கொண்டார்? = விஜயநகர பேரரசுடன்

தூரக்கிழக்கு பகுதியில் அமைந்திருந்த மலாக்கா தீவை கைப்பற்றிய போர்ச்சுகீசிய ஆளுநர் யார்? = அல்போன்ஸே-டி-அல்புகர்க்

அல்புகர்க் அவர்கள் பாரசீக வளைகுடாவில் எந்த இடத்தில் துறைமுகம் ஒன்றை நிறுவினார்? = ஆர்மஸ் என்ற இடம்

இந்தியாவில் போர்ச்சுகீசிய ஆதிக்கத்தை உண்மையாக நிலைநாட்டியவர் என்று போற்றப்பட்ட போர்ச்சுகீசிய ஆளுநர் யார்? = அல்போன்ஸே-டி-அல்புகர்க்

அல்போன்ஸே-டி-அல்புகர்க் அவர்கள் இறந்த ஆண்டு எது? = கி.பி 1515

அல்புகர்க் அவர்கள் இறந்த இடம் எது? = கோவா

தலைக்கோட்டை போர் நடைபெற்ற ஆண்டு எது? = கி.பி 1565

எந்த ஆண்டு போர்ச்சுகல் நாடு ஸ்பெயின் கட்டுப்பாட்டில் வந்தது? = கி.பி 1580

## டச்சுகாரர்கள் :

போர்ச்சுகீசியர்களின் வீழ்ச்சிக்குப் பிறகு இந்தியாவிற்கு வருகைப் புரிந்தவர்கள் யார்? = டச்சுக்காரர்கள்

டச்சுகிழக்கிந்திய கம்பெனி என்ற நிறுவனத்தை தோற்றுவித்தவர்கள் யார்? = ஹாலந்து நாட்டை சேர்ந்த மக்கள்

எந்த ஆண்டு டச்சுகிழக்கிந்திய கம்பெனி நிறுவனம் தொடங்கப்பட்டது? = கி.பி 1602

டச்சுகாரர்கள் எந்த நாட்டின் மீது அதிக நாட்டம் செலுத்தினர்? = நறுமணத் தீவுகள்

டச்சுக்காரர்கள் இந்தியாவில் எந்த இடத்தில் தன் வாணிப மையங்களை அமைத்திருந்தனர்? = சின்சுரா, நாகப்பட்டினம், சூரத், பழவேற்காடு, மசூலிப்பட்டினம், புரோச், காம்பே, அகமதாபாத், பாட்னா, மற்றும் காசிம்பஜார் ஆகியவை

எந்த ஆண்டு டச்சுக்காரர்கள் புலிகட் என அழைக்கப்படும் பழவேற்காட்டில் தங்கள் வாணிப தளத்தை நிறுவினர்? = கி.பி 1610

டச்சுக்காரர்கள் ஆங்கிலேய வியாபாரிகளை கொன்ற இடம் எது? = அம்பாய்னா

அம்பாய்னா படுகொலை நடைபெற்ற ஆண்டு எது? = கி.பி 1623

டச்சுக்காரர்கள் யாரிடம் தன் வாணிபதளங்களை விற்றுவிட்டு இந்தியா விட்டு வெளியேறி சென்றனர்? = ஆங்கிலேயர்

## ஆங்கிலேயர்கள் :

ஆங்கிலேயர்கள் எந்தக் கப்பலை தோற்கடித்து ஐரோப்பாவில் அதிக கடல் வலிமை பெற்ற நாடாக விளங்கியது? = 'ஸ்பானிய ஆர்மடா'

'ஸ்பானிய ஆர்மடா' என்ற போர்க்கப்பல் ஆங்கிலேயர்களினால் தோற்கடிக்கப்பட்ட ஆண்டு எது? = கி.பி 1588

எத்தனை வியாபாரிகள் ஒன்று சேர்ந்து ஆங்கில கிழக்கிந்திய கம்பெனியை தோற்றுவித்தனர்? = 100 லண்டன் வியாபாரிகள்

ஆங்கில கிழக்கிந்திய கம்பெனிக்கு வியாபாரம் செய்வதற்கான அனுமதியை வழங்கியவர் யார்? = இங்கிலாந்து அரசி முதலாம் எலிசபெத்

முதலாம் எலிசபெத் அவர்கள் எந்த ஆண்டு ஆங்கில கிழக்கிந்திய கம்பெனிக்கு வியாபாரம் செய்வதற்கான அனுமதியை வழங்கினார்? = கி.பி 1600, டிசம் - 31

ஜஹாங்கீரின் அரசவைக்கு வருகை புரிந்த ஆங்கில மாலுமி யார்? = வில்லியம் ஹாக்கின்ஸ்

வில்லியம் ஹாக்கின்ஸ் அவர்கள் யார் கொடுத்த வியாபாரம் செய்ய கோரிய அனுமதி கடிதத்துடன் ஜஹாங்கீரின் அரசவைக்கு வருகை புரிந்தார்? = இங்கிலாந்து அரசர் முதலாம் ஜேம்ஸ்

வில்லியம் ஹாக்கின்ஸ் அவர்கள் ஜஹாங்கீரின் அரசவைக்கு வருகை புரிந்த ஆண்டு எது? = கி.பி 1609

எந்த ஆண்டின் போது ஜஹாங்கீர் ஆங்கிலேயருக்கு பர்மன் அல்லது அனுமதிக் கடிதம் ஒன்றை வழங்கினார்? = கி.பி.1612

எந்த ஆண்டின் போது ஆங்கிலேயர்கள் சூரத்தில் தன் வணிக நிலையத்தை நிறுவினர்? = கி.பி.1613

சர்தாமஸ் ரோ என்ற மற்றொரு ஆங்கில மாலுமி ஜஹாங்கீரின் அரசவைக்கு வருகை புரிந்த ஆண்டு எது? = கி.பி 1615

ஆங்கிலேயர்கள் இந்தியாவில் வாணிபம் செய்ய அமைத்த வாணிப மையங்கள் சிலவற்றைக் கூறுக? = சூரத், ஆக்ரா, பரோச் மற்றும் அகமதாபாத்

சென்னை நகரை நிறுவிய ஆங்கில அதிகாரி யார்? = பிரான்சிஸ் டே

பிரான்சிஸ் டே அவர்கள் எந்த ஆண்டு சென்னை நகரத்தை உருவாக்கினார்? = கி.பி 1639

பிரான்சிஸ் டே அவர்கள் எந்த அரசரிடமிருந்து ஒரு நிலப்பகுதியை வாங்கி சென்னை நகரை உருவாக்கினார்? = சந்திரகிரி அரசரிடமிருந்து

புனித ஜார்ஜ் கோட்டை கட்டப்பட்ட ஆண்டு எது? = கி.பி 1640

இங்கிலாந்து அரசர் இரண்டாம் சார்லஸ் அவர்கள் யாரை திருமணம் செய்து கொண்டார்? = போர்ச்சுகல் நாட்டு இளவரசி காத்தரின்

இரண்டாம் சார்லஸ் அவர்களின் திருமணத்திற்கு போர்ச்சுகீசியர் சீர்வரிசையாக கொடுத்த இடம் எது? = மும்பை

மும்பை நகரை ஆங்கில கிழக்கிந்திய கம்பெனிக்கு வாடகைக்காக விட்ட மன்னர் யார்? = இங்கிலாந்து அரசர் இரண்டாம் சார்லஸ்

இரண்டாம் சார்லஸ் அவர்கள் என்ன விலைக்கு மும்பை நகரை ஆங்கில கிழக்கிந்திய கம்பெனிக்கு வாடகைக்காக விட்டார்? = ஆண்டொன்றுக்கு 10 பவுண்ட்

கி.பி.1690 ஆம் ஆண்டு சுதநூதி, கோவிந்தபூர் மற்றும் காளிகட்டம் என்ற மூன்று கிராமங்களை விலைக்கு வாங்கியவர் யார்? = ஜாப் சார்நாக்

ஜாப் சார்நாக் அவர்களால் உருவாக்கப்பட்ட எந்த கிராமப்பகுதியானது பிற்காலத்தில் கல்கத்தா நகரமாக வளர்ச்சியடைந்தது? = சுதநூதி

கி.பி 1699 ஆம் ஆண்டு எந்த முகலாயர் மன்னர் அனுமதி பெற்று கல்கத்தாவில் மற்றொரு வாணிபதளத்தினை அமைத்தனர்? = ஔரங்கசீப்

வில்லியம் கோட்டை கட்டப்பட்ட இடம் எது? = கல்கத்தா

யாருடைய நினைவாக கல்கத்தாவில் வில்லியம் கோட்டை கட்டப்பட்டது? = இங்கிலாந்து மன்னர் மூன்றாம் வில்லியம்

கல்கத்தாவில் கட்டப்பட்ட கோட்டைக்கு வில்லியம் கோட்டை என பெயரிட்டவர் யார்? = ஜாப் சார்னாக்

எந்த ஆண்டு வரை ஆங்கில கிழக்கிந்திய கம்பெனியின் ஆதிக்கம், செல்வாக்கு ஆகியவை இந்தியாவில் விரிவுபடுத்தப்பட்டு இருந்தது? = கி.பி 1858

## டேனியர்கள் :

டென்மார்க் நாட்டை சேர்ந்த மக்கள் எவ்வாறு அழைக்கப்பட்டனர்? = டேனியர்கள்

டேனியர்கள் தரங்கம்பாடியில் வாணிபமையத்தை அமைத்த ஆண்டு எது? = கி.பி 1620

டேனியர்கள் கி.பி 1676 ஆம் ஆண்டு எந்த இடத்தில் வாணிப மையங்களை அமைத்தனர்? = வங்காளத்திலுள்ள சீராம்பூர் என்ற இடத்தில்

எந்த ஆண்டின் போது டேனியர்கள் தன் வணிக நிலையங்கள் முழுவதையும் பிரிட்டாஷ்ருக்கு விற்றனர்? = கி.பி.1845

## பிரெஞ்சுக்காரர்கள் :

பிரெஞ்சு கிழக்கிந்திய கம்பெனி தோற்றுவிக்கப்பட்ட ஆண்டு எது? = கி.பி 1664

யாருடைய முயற்சியின் காரணமாக பிரெஞ்சு கிழக்கிந்திய கம்பெனி தோற்று விக்கப்பட்டது? = கால்பர்ட்

கால்பர்ட் என்பவர் எந்த மன்னரின் அமைச்சராக இருந்தார்? = பிரான்ஸ் மன்னர் பதினான்காம் லூயி

எந்த ஆண்டின் போது பிரெஞ்சு கிழக்கிந்திய கம்பெனி சூரத் நகரில் தன் வாணிப தலங்களை நிறுவினர்? = கி.பி 1668

முதலாவது பிரெஞ்சு வணிக நிலையத்தை சூரத் நகரில் நிறுவியவர்? = பிரான்சிஸ் கரோன்

எந்த ஆண்டின் போது பிரெஞ்சு கிழக்கிந்திய கம்பெனி மசூலிப்பட்டினத்தில் தன் வாணிப தலங்களை நிறுவினர்? = கி.பி 1669

மசூலிப்பட்டிணத்தில் பிரெஞ்சு வணிக நிலையாமானது யாரால் நிறுவப்பட்டது? = மெர்க்காரா

பாண்டிச்சேரி என்ற இடத்தை நிறுவியர் யார்? = பிரான்சிஸ் மார்டின்

பிரான்சிஸ் மார்டின் அவர்கள் எந்த ஆண்டு பாண்டிச்சேரி என்ற இடத்தை நிறுவினார்? = கி.பி 1674

பிரான்சிஸ் மார்டின் அவர்கள் எந்த மன்னரிடமிருந்து சென்னைக்கு தெற்கே ஒரு நிலப்பகுதியை வாங்கி பாண்டிச்சேரி என்ற இடத்தை நிறுவினார்? = தஞ்சாவூர் மன்னரிடமிருந்து

பிரெஞ்சுகாரர்களின் தலைமையிடமாக திகழ்ந்த இடம் எது? = பாண்டிச்சேரி

பிரெஞ்சுக்காரர்கள் கி.பி 1690 ஆம் ஆண்டு எந்த இடத்தில் மற்றொரு வாணிப தலத்தினை நிறுவினார்கள்? = சந்திரநாகூரில்

பிரெஞ்சுக்காரர்கள் மாஹியை பெற்ற ஆண்டு எது? = கி.பி 1725

பிரெஞ்சுக்காரர்கள் காரைக்காலை பெற்ற ஆண்டு எது? = கி.பி 1739

டியூப்ளே அவர்கள் பிரெஞ்சு கவர்னராக பொறுப்பேற்ற ஆண்டு எது? = கி.பி 1742

## ஆங்கில - பிரெஞ்சு ஆதிக்கப் போட்டி - (கர்நாடக போர்கள்) :

ஆங்கிலம் மற்றும் பிரெஞ்சு கிழக்கிந்திய கம்பெனிகள் எந்த நோக்கத்தின் அடிப்படையில் தோற்றுவிக்கப்பட்டன? = இந்தியாவுடன் வியாபாரம் செய்யும் நோக்கத்துடன்

கர்நாடக போர்கள் மற்றும் அவற்றின் முடிவில் ஏற்பட்ட உடன்படிக்கைகள் ஆகியவற்றை கூறுக :

| கர்நாடக போர்கள் | நடைபெற்ற ஆண்டு | காரணம் | யார் யார் இடையில் நடைபெற்றது | போரின் முடிவில் ஏற்பட்ட உடன்படிக்கை | உடன் படிக்கை ஏற்பட்ட ஆண்டு |
|---|---|---|---|---|---|
| முதல் கர்நாடக போர் | கி.பி 1746 - கி.பி 1748 | ஐரோப்பாவில் நடைபெற்ற ஆஸ்திரிய வாரிசுமை போரின் பிரதிபலிப்பு | ஆங்கிலேயர் - பிரெஞ்சுக் காரர்கள் | அய்லாஷ்பேல் உடன்படிக்கை | கி.பி 1748 |
| இரண்டாவது கர்நாடக போர் | கி.பி 1748 - கி.பி 1754 | ஹைதராபாத் மற்றும் கர்நாடகாவில் ஏற்பட்ட வாரிசுரிமை போர் | ஆங்கிலேயர் - பிரெஞ்சுக் காரர்கள் | பாண்டிச்சேரி உடன்படிக்கை | கி.பி 1755 |
| மூன்றாம் கர்நாடக போர் | கி.பி 1756 - கி.பி 1763 | ஐரோப்பாவில் ஏற்பட்ட ஏழாண்டு போர் | ஆங்கிலேயர் - பிரெஞ்சுக் காரர்கள் | பாரிஸ் உடன்படிக்கை | கி.பி 1763 |

கர்நாடகத்தின் தலைநகர் பகுதி எது? = ஆற்காடு

கி.பி 1740 - கி.பி 1763 இடைப்பட்ட காலங்களில் ஆங்கிலேய பிரெஞ்சுகாரர்களிடையே எத்தனை போர்கள் நடைபெற்றன? = மூன்று கர்நாடக போர்கள்

கர்நாடகம் யாருடைய ஆட்சிக்கு உட்பட்ட பகுதியாக இருந்தது? = முகலாயர் ஆட்சிக்கு உட்பட்ட பகுதியாக நிஜாமின் கட்டுப்பாடு

### முதல் கர்நாடக போர் (கி.பி.1746 - கி.பி.1748):

முதல் கார்நாடக போரானது எதன் பிரதிபலிப்பாக கூறப்படுகிறது? = ஐரோப்பாவில் நடைபெற்ற ஆஸ்திரிய வாரிசுரிமை போர்

முதல் கர்நாடக போருக்கு வித்திட்ட காரணம் எது? = பாண்டிச்சேரியில் பிரெஞ்சு கவர்னராக இருந்த டியூப்ளே இந்தியாவில் பிரெஞ்சு ஆதிக்கத்தை நிலைநாட்டுவதை நோக்கமாக கொண்டிருந்ததால்

முதல் கர்நாடக போரின் போது சென்னையை முற்றுகையிட்டு கைப்பற்றிய பிரெஞ்சு தளபதி யார்? = டியூப்ளே மற்றும் மொரிஷியஸ் கவர்னரான லாபோர்டொனாய்ஸ்

ஆஸ்திரிய வாரிசுரிமை போர் முடிவுற்ற ஆண்டு எது? = கி.பி 1748

முதல் கர்நாடக போரின் முடிவில் ஏற்பட்ட அய்லாஷபெல் உடன்படிக்கையின் படி ஆங்கிலேயர் மீண்டும் எந்த நகரை திரும்ப பெற்றனர்? = சென்னை

## இரண்டாம் கர்நாடக போர் (கி.பி.1748 - கி.பி.1754):

இரண்டாம் கார்நாடக போரானது எதன் பிரதிபலிப்பாக கூறப்படுகிறது? = ஹைதராபாத்திலும், கர்நாடகத்திலும் ஏற்பட்ட வாரிசுரிமை போர்

ஹைதராபாத் நிஜாம் அஷப்ஷா அவர்கள் இறந்த ஆண்டு எது? = கி.பி 1748

ஹைதராபாத் நிஜாம் அஷப்ஷா அவர்கள் இறந்ததால் யார் யாருக்கும் இடையில் வாரிசுரிமை போர் நடைபெற்றது? = அவரது மகன் நாசிர் ஜங் மற்றும் பேரன் முஷபர் ஜங்கிற்கு இடையே

ஆற்காட்டு அரியணைக்கு போட்டியிட்டவர்கள் யார்? = அன்வாருதீன் மற்றும் சந்தா சாகிப்

யார் இறந்ததால் ஆற்காட்டு அரியணைக்கு போட்டி ஏற்பட்டது? = கர்நாடக நவாப் தோஸ்த் அலி

இரண்டாவது கர்நாடக போரில் பிரெஞ்சுக்காரர்கள் யாரை ஆதரித்தனர்? = முஷபர் ஜங் மற்றும் சந்தா சாகிப்

இரண்டாவது கர்நாடக போரில் ஆங்கிலேயர்கள் யாரை ஆதரித்தனர்? = நாசிர் ஜிங் மற்றும் அன்வாருதின்

அன்வாரூதின் அவர்கள் எந்த போரின் போது கொல்லப்பட்டார்? = ஆம்பூர் போர்

ஆம்பூர் போர் நடைபெற்ற ஆண்டு எது? = கி.பி 1749

ஆம்பூர் போரில் அன்வாரூதின் கொல்லப்பட்டதால் அவரது மகன் முகமது அலி எங்கு சென்று அடைக்கலம் புகுந்தார்? = திருச்சி மலைக்கோட்டையில்

நாசர் ஜங் மற்றும் முஷபர் ஜங் ஆகிய இருவரும் கொல்லப்பட்டதால் ஹைதராபாத் நிஜமாக நியமிக்கப்பட்டவர் யார்? = சலபெத் ஜங்

சலபெத் ஜங்கினை ஹைதராபாத்தின் நிஜாமாக நியமித்தவர் யார்? = பிரெஞ்சு தளபதி புஸ்ஸி

சந்தா சாஹிப்பை தோற்கடித்து முகம்மது அலியை ஆற்காட்டின் நவாப்பாக்கிய ஆங்கிலேய தளபதி யார்? = இராபர்ட் கிளைவ்

ஆற்காட்டு வீரர் என்ற பெருமையோடு அழைக்கப்பட்ட ஆங்கிலேய தளபதி யார்? = ராபர்ட் கிளைவ்

எந்த ஆண்டு பிரெஞ்சு தளபதியான டியூப்ளே அவர்கள் மீண்டும் பிரான்ஸிற்கு திரும்ப அழைக்கப்பட்டார்? = கி.பி 1754

டியூப்ளே பிறகு இந்தியாவில் பிரெஞ்சு தளபதியாக நியமிக்கப்பட்டவர் யார்? = தளபதி கோத்யூ

பாண்டிச்சேரி உடன்படிக்கையானது எந்த இருவருக்கும் இடையே நடைபெற்றது? = பிரெஞ்சு தளபதி கோத்யூ மற்றும் ராபர்ட் கிளைவ்

## மூன்றாம் கர்நாடக போர் (கி.பி.1756 - கி.பி.1763): :

மூன்றாம் கார்நாடக போரானது எதன் பிரதிபலிப்பாக கூறப்படுகிறது? = ஐரோப்பாவில் ஏற்பட்ட ஏழாண்டு போர்

ஆங்கிலேயரின் புனித டேவிட் கோட்டையை கைப்பற்றிய பிரெஞ்சு தளபதி யார்? = கவுண்ட்-டி-லாலி

ஆங்கில படைத்தளபதி சர் அயர்கூட் அவர்கள் பிரெஞ்சு படையை எந்த போர்க்களத்தில் தோற்கடித்தார்? = வந்தவாசி

வந்தவாசி போர் நடைபெற்ற ஆண்டு எது? = கி.பி 1760

எந்த ஆண்டு பிரெஞ்சு தளபதி கவுண்ட்-டி-லாலி அவர்கள் பாண்டிச்சேரி பகுதியை ஆங்கிலேயரிடம் ஒப்படைத்தார்? = கி.பி 1761

மூன்றாம் கர்நாடக போரின் முடிவில் ஏற்பட்ட பாரிஸ் உடன்படிக்கையின் படி எந்த பகுதிகளை பிரெஞ்சுக்காரர்கள் மீண்டும் பெற்றனர்? = பாண்டிச்சேரி, காரைக்கால், சந்திரநாகூர், மற்றும் மாஹி

முகலாய பேரரசில் வளமான நிலப்பகுதியாக இருந்த வங்காளம் யார் தலைமையில் சுதந்திரமான பேரரசாக உருவானது? = அலிவர்திகான் தலைமையில்

அலிவர்திகான் இறந்த பிறகு வங்காளத்தின் நவாப்பாக பதவியேற்றவர் யார்? = சிராஜ்-உத்-தௌளலா (அலிவர்த்திகான் பேரன்)

## பிளாசிப் போர் :

பிளாசிப்போர் நடைபெற்ற ஆண்டு எது? = கி.பி 1757

ஐரோப்பிய நாடுகள் தனது வங்காள நிலப்பகுதிகளில் தனது அனுமதியின்றி கோட்டைகளை கட்டக்கூடாது என்று கூறியவர் யார்? = சிராஜ்-உத்-தௌளலா

சிராஜ்-உத்-தௌளலா அவர்கள் பெரும்படையுடன் சென்று கல்கத்தாவை கைப்பற்றி ஆங்கிலேய போர் வீரர்கள் எத்தனை பேரை போர்க்கைதிகளாக பிடித்து சிறையில் அடைத்தார்? = 146 பேர்கள்

சிராஜ்-உத்-தௌளலா அவர்கள் சிறைக்கைதிகளை அடைத்த பின்னர் மறுநாளில் எத்தனை கைதிகள் மட்டும் உயிருடன் இருந்தனர்? = 23 பேர்

சிராஜ்-உத்-தௌளலா அவர்கள் சிறைக்கைதிகளை அடைத்த நிகழ்வு வரலாற்றில் எவ்வாறு அழைக்கப்படுகிறது? = கல்கத்தா இருட்டறை துயரச் சம்பவ நிகழ்ச்சி

இருட்டறை துயரச் சம்பவ நிகழ்ச்சிக்கு பிறகு கல்கத்தா நகரை திரும்பவும் கைப்பற்றிய ஆங்கில தளபதிகள் யார்? = வாட்சன் மற்றும் இராபர்ட் கிளைவ்

பிளாசிப் போரில் தோற்கடிக்கப்பட்ட மன்னர் யார்? = சிராஜ்-உத்-தௌளலா

சிராஜ்-உத்-தௌளலா அவர்கள் பிளாசிப் போரில் தோற்கடிக்கப்பட்ட பின் வங்காளத்தின் நிர்வாகியாக யாரை ஆங்கிலேய அரசு நியமித்தது? = மீர்ஜாபர்

மீர்ஜாபர் அவர்களுக்கு பிறகு வங்காளத்தின் நவாப்பாக யாரை ஆங்கில அரசு நியமித்தது? = மீர்காசிம்

பிளாசிப் போரின் மூலம் ஆங்கில வணிகக் குழுவானது எத்தனை பர்கானாக்களை பெற்றது? = 24 பர்கானாக்கள்

### பக்சார் போர் (கி.பி.1764) :

மீர்ஜாபர் அவர்களுக்கு பிறகு வங்காளத்தின் நவாப்பாக யாரை ஆங்கில அரசு நியமித்தது? = மீர்காசிம்

இந்திய வியாபாரிக்ளுக்கு உதவிடும் நோக்கில் அவர்கள் செலுத்தி வந்த சுங்கவரியை ரத்து செய்தவர் யார்? = மீர்காசிம்

ஆங்கிலேயர்கள் மீர்காசிம்மை தோற்கடித்த பின்னர் மீர்காசிம் யாரிடம் சென்று அடைக்கலம் அடைந்தார்? = அயோத்தியை ஆட்சி செய்த நவாப் ஷீஜா உத் தௌலா

பக்சார் போர் நடைபெற்ற ஆண்டு எது? = கி.பி 1764 - அக்டோபர் 22

பக்சார் போரில் ஆங்கிலேயருக்கு எதிராக போரிட்ட கூட்டுப்படை எது? = மீர்காசிம், ஷீஜா உத்தௌலா, இரண்டாம் ஷா ஆலம்

பக்சார் போர் முடிவில் ஏற்பட்ட உடன்படிக்கை எது? = அலகாபாத் உடன்படிக்கை (கி.பி.1765)

இந்தியாவில் ஆங்கிலேய ஆட்சி கால் ஊன்ற வழிவகுத்த போர் எது = பிளாசிப் போர்

ஆங்கிலேயரை வங்காளத்தின் உண்மையான ஆட்சியாளராக மாற்றிய போர் = பக்சார் போர்

## இராபர்ட் கிளைவ் முதல் கானிங் பிரபு வரை

### இராபர்ட் கிளைவ் (கி.பி.1765 - கி.பி.1772):

இராபர்ட் கிளைவ் அவர்கள் ஆங்கில கிழக்கிந்திய கம்பெனிக்கு வந்த பிறகு நடைபெற்ற இரு முக்கிய போர்கள் எது? = பிளாசிப் போர் (1757) மற்றும் பக்சார் போர் (1764)

எந்த போருக்கு பிறகு இராபர்ட் கிளைவ் அவர்கள் வங்காள கவர்னராக நியமிக்கப்பட்டார்? = பக்சார் போர்

இராபர்ட் கிளைவ் அவர்கள் வங்காளத்தின் கவர்னராக நியமிக்கப்பட்ட ஆண்டு எது? = கி.பி 1765

ஆங்கில கிழக்கிந்திய கம்பெனியை முதன் முதலில் இந்தியாவில் நிலையாக காலூன்ற செய்த ஆளுநர் யார்? = இராபர்ட் கிளைவ்

'ஆங்கிலக்கிழக்கிந்திய கம்பெனி ஊழியர்கள் எவ்விதத்திலும் இந்தியர்களிடமிருந்து அன்பளிப்பு பெறக்கூடாது' - எனக் கூறியவர் யார்? = இராபர்ட் கிளைவ்

கம்பெனி ஊழியர்கள் மற்றும் விதவைகளுக்கு உதவ இராபர்ட் கிளைவ் உருவாக்கிய நிதி அமைப்பு எது? = கிளைவின் நிதி

வங்காளத்தில் இரட்டை ஆட்சி முறையை அறிமுகப்படுத்திய வங்காளா கவர்னர் யார்? = இராபர்ட் கிளைவ்

இராபர்ட் கிளைவ் அவர்கள் யாரிடமிருந்து உரிமையியல் மற்றும் குற்றவியல் உரிமைகளை பெற்ற பிறகு வங்காளாத்தில் இரட்டை ஆட்சி முறையை அறிமுகப்படுத்தினார்? = முகலாய பேரரசர் இரண்டாம் ஷா ஆலமிடருந்து

இரட்டை ஆட்சி முறை வங்காளத்தில் ரத்து செய்யப்பட்ட ஆண்டு எது? = கி.பி 1772

வங்காளம் ஆங்கிலக் கிழக்கிந்திய நிறுவனத்தின் நேரடி ஆட்சியின் கீழ் கொண்டுவரப்பட்ட ஆண்டு எது? = 1772

## முதலாவது ஆங்கில - மைசூர் போர் :

முதலாவது மைசூர் போர் நடைபெற்ற ஆண்டு எது? = கி.பி 1767 - கி.பி 1769

முதலாவது ஆங்கில - மைசூர் போரின் போது வங்காளத்தின் கவர்னராக இருந்தவர் யார்? = இராபர்ட் கிளைவ்

முதலாவது ஆங்கில - மைசூர் போர் எந்த இருவருக்கும் இடையே நடைபெற்றது? = மைசூர் ஆண்ட ஹைதர் அலி மற்றும் இராபர்ட் கிளைவ்

ஹைதர் அலிக்கு எதிராக இங்கிலாந்து மராத்தியரோடும், ஹைதராபாத்தை ஆட்சி செய்த நிஜாமோடும் உடன்படிக்கை செய்து கொண்ட ஆண்டு எது? = கி.பி 1766

எந்த ஆண்டின் போது ஹைதர் அலி மற்றும் நிஜாமையும் ஆங்கிலேயர்கள் செங்கம் என்ற இடத்தில் தோற்கடித்தனர்? = கி.பி 1767

செங்கம் போரில் ஹைதர் அலி தோற்றாலும் எந்த இருடங்களை கைப்பற்றி ஹைதர் அலி தன் நிர்வாகத்தை அங்கு ஏற்படுத்தினார்? = ஆம்பூர் மற்றும் மங்களூர்

முதலாவது மைசூர் போரின் முடிவில் ஏற்பட்ட உடன்படிக்கை எது? = சென்னை (மதராஸ்) உடன்படிக்கை

சென்னை உடன்படிக்கை நடைபெற்ற ஆண்டு எது? = கி.பி 1769

முதலாவது ஆங்கில - மைசூர் போரின் முடிவில் யாருடைய புகழ் மிகவும் உயர்த்தி பேசப்பட்டது? = ஹைதர் அலி

ஹைதர் அலி பிறந்த ஆண்டு எது? = கி.பி 1722

## வாரன் ஹேஸ்டிங்ஸ் பிரபு : (கி.பி 1772 - கி.பி 1785) :-

எந்த ஆண்டின் போது வங்களத்தில் ஏற்பட்ட பஞ்சத்தினால் மக்கள் பெரும் துயரத்திற்கு உள்ளானார்கள்? = கி.பி 1772

எந்த ஆண்டு வாரன் ஹேஸ்டிங்ஸ் பிரபு அவர்கள் வங்காள கவர்னராக நியமிக்கப்பட்டார்? = கி.பி 1772

வங்காளத்தின் கடைசி கவர்னராக பதவி வகித்தவர் யார்? = வாரன்ஹேஸ்டிங்ஸ் பிரபு

வங்காளத்தின் முதல் தலைமை ஆளுநர் மற்றும் வில்லியம் கோட்டையின் முதல் தலைமை ஆளுநர் என் அழைக்கப்பட்டவர் யார்? = வாரன் ஹேஸ்டிங்ஸ் பிரபு

எந்த ஆண்டு வாரன் ஹேஸ்டிங்ஸ் அவர்கள் வங்காளத்தின் முதல் தலைமை ஆளுநராக நியமிக்கப்பட்டார்? = கி.பி 1774

எந்த சட்டத்தின் மூலம் வாரன் ஹேஸ்டிங்ஸ் அவர்கள் வங்காளத்தின் முதல் தலைமை ஆளுநராக நியமிக்கப்பட்டார்? = ஒழுங்குமுறைச் சட்டத்தின் கீழ்

ஒழுங்குமுறைச் சட்டம் கொண்டுவரப்பட்ட ஆண்டு எது? = கி.பி 1773

எந்தச் சட்ட முறை இந்திய அரசியல் அமைப்பின் வளர்ச்சிக்கு முதல் படியாக அமைந்தது? = ஒழுங்குமுறைச் சட்டம்

ஒழுங்குமுறை சட்டத்தின் சரத்துகள் :

1) சென்னை மும்பை ஆளுநர்களுக்கு மேலாக வங்காளத்தில் தலைமை ஆளுநர் நியமனம்

2) கொல்கத்தாவில் ஒரு தலைமை நீதிபதி மற்றும் 3 நீதிபதிகளைக் கொண்ட உச்சநீதிமன்றம் அமைக்க வழி செய்யப்பட்டது

3) தலைமை ஆளுநருக்கு உதவி புரிய நான்கு உறுப்பினர்கள் கொண்ட நிர்வாகக் குழு அமைத்தல்

ஒழுங்குமுறைச் சட்டத்தின் குறைகளை போக்குவதற்காக கொண்டுவரப்பட்ட சட்டம் எது? = பிட் இந்தியச் சட்டம்

பிட் இந்தியச் சட்டத்தை கொண்டு வந்தவர் யார்? = ஆங்கில பிரதமர் இளைய பிட்

பிட் இந்தியச் சட்டம் கொண்டுவரப்பட்ட ஆண்டு எது? = கி.பி 1784

பிட் இந்தியச் சட்டத்தின் சரத்துகள் :

1) இங்கிலாந்து அரசின் பரிந்துரையின் படி தலைமை ஆளுநர் நியமிக்கப்படுவார் எனக் கூறப்பட்டது

2) நிர்வாகக் குழு உறுப்பினர் எண்ணிக்கை, நான்கிலிருந்து மூன்றாகக் குறைக்கப்பட்டது. நிர்வாக வளர்ச்சிக்காக 6 பேர் கொண்ட கட்டுப்பாட்டுக் குழு இங்கிலாந்தில் உருவாக்கப்பட்டது

3) இந்தியாவில் உள்ள ஆங்கிலப் படை வீரர்களுக்குப் படைத்தளபதியாக தலைமை ஆளுநர் செயல்படுவார் என்றும் சென்னை மும்பை மாகாணங்கள் அவரின் முழுக்கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்படும் எனவும் ஆங்கில அரசின் கீழ் கம்பெனியின் நிர்வாகம் செயல்படவும் இச்சட்டம் வழி வகுத்தது

இராபர்ட் கிளைவால் வங்காளத்தில் ஏற்படுத்தப்பட்ட இரட்டை ஆட்சி முறையை ஒழித்தவர் யார்? = வாரன் ஹேஸ்டிங்ஸ் பிரபு

யாருடைய ஆட்சியின் போது அரசின் கருவூலம் முர்ஷிதாபாத்தில் இருந்து கல்கத்தாவிற்கு மாற்றப்பட்டது? = வாரன் ஹேஸ்டிங்ஸ் பிரபு

வாரன் ஹேஸ்டிங்ஸ் பிரபு எந்த நகரத்தை ஆங்கிலேய இந்தியாவின் தலைநகரமாக ஏற்படுத்தினார்? = கல்கத்தா

கல்கத்தாவில் சாதர் திவானி அதாலத் (சிவில்) மற்றும் சாதர் நிஜாமத் அதாலத் (கிரிமினல்) என்ற இரு நீதி மன்றங்கள் எந்த தலைமை ஆளுநரால் ஒவ்வொரு மாவட்டத்திலும் ஏற்படுத்தப்பட்டன? = வாரன் ஹேஸ்டிங்ஸ் பிரபு

எந்த ஆளுநர் காலத்தில் இந்து முஸ்லீம் சட்டத் தொகுப்பானது உருவாக்கப்பட்டது? = வாரன் ஹேஸ்டிங்ஸ் பிரபு

பிரிட்டிஸ் இந்தியாவின் முதல் தலைமை நீதிபதியாக நியமிக்கப்பட்டவர் யார்? = சர் எலிஜா இம்பே

வாரன் ஹேஸ்டிங்ஸ் பிரபு காலத்தில் வசூலிக்கப்பட்ட ஒரே சீரான சுங்கவரியின் மதிப்பு யாது? = 2.5%

வாரன் ஹேஸ்டிங்ஸ் பிரபு அவர்கள் சுங்க சாவடிகளை அமைத்த ஐந்த இடங்கள் எது? = கல்கத்தா, டாக்கா, ஹீக்ளி, பாட்னா, முர்ஷிதாபாத்

வருவாய்த்துறையை மேம்படுத்த வாரநேஸ்டிங்ஸ் அவர்கள் எந்த நகரில் வருவாய்த்துறை கழகத்தை நிறுவினார்? = கல்கத்தா

இஸ்லாமிய கல்வி வளர்ச்சிக்காக மதரஸா கல்வி நிறுவனத்தை துவக்கிய தலைமை ஆளுநர் யார்? = வாரன் ஹேஸ்டிங்ஸ் பிரபு

மதரஸா கல்வி நிறுவனம் துவங்கப்பட்ட ஆண்டு எது? = கி.பி 1781

மதரஸா கல்வி நிறுவனம் துவங்கப்பட்ட இடம் எது? = கல்கத்தா

மாவட்ட ஆட்சியர் என்ற பதவியை உருவாக்கிய வங்காள தலைமை ஆளுநர் யார்? = வாரன் ஹேஸ்டிங்ஸ் பிரபு

## ரோஹில்லாப் போர்:

ரோஹில்லாப் போர் நடைபெற்ற ஆண்டு எது? = கி.பி 1774

ரோஹில்லர்கள் எந்த நாட்டின் மக்கள் ஆவர்? = ஆப்கானிய மக்கள்

ரோஹில்லர்களை தாக்கியவர்கள் யார்? = மராத்தியர்கள்

ரோகில்கண்ட் பகுதியை ஆட்சி செய்த ஆட்சியாளர்களின் பெயர் யாது? = ஹபிஸ் ரகமத் கான்

ரோஹில்லர்களை மராத்தியர்கள் தாக்கியதால் ரோஹில்லர்கள் யாரை உதவிக்கு நாடினர்? = அயோத்தியின் நவாப் ஷீஜா-உத்-தெளலா

மராத்தியர்கள் ரோஹில்லா மீது படையெடித்த ஆண்டு எது? = கி.பி 1773

ரோஹில்லர்கள் அயோத்தி நவாப்புக்கு எவ்வளவு தருவதாக ஒப்புக்கொண்டனர்? = 40 இலட்சம்

வாரன் ஹேஸ்டிங்ஸ் அவர்கள் ரோஹில்லா மீது தன் படையை அனுப்பி ரோஹில்லர்களை தோற்கடித்த ஆண்டு எது? = கி.பி 1774

எந்த தலைமை ஆளுநர் முன்னிலையில் இரண்டாவது ஆங்கில-மைசூர் போர் நடைபெற்றது? = வாரன் ஹேஸ்டிங்ஸ் பிரபு

## இரண்டாவது ஆங்கில-மைசூர் (கி.பி 1780 - கி.பி 1784):

மராத்தியர்கள் மைசூர் நகரின் மீது போர் தொடுத்த ஆண்டு? = கி.பி 1771

ஹைதர் அலி யாரை தோற்கடித்து கி.பி.1780 ஆண்டு ஆற்காட்டை கைப்பற்றினார்? = கர்னல் பெய்லி

போர்ட்டோ நோவோ போர் நடைபெற்ற ஆண்டு எது? = கி.பி 1781

போர்ட்டோ நோவோ போர் எந்த இருவர் இடையில் நடைபெற்றது? = ஆங்கில படைத்தளபதி சர் அயர் கூட் மற்றும் ஹைதர் அலி

போர்ட்டோ நோவோ போரில் வெற்றி பெற்றவர் யார்? = சர் அயர் கூட்

எந்த ஆண்டு ஹைதர் அலி அவர்கள் சர் அயர் கூட்டால் மீண்டும் ஆரணி என்ற இடத்தில் தோற்கடிக்கப்பட்டார்? = கி.பி 1782

ஹைதர் அலி இறந்த ஆண்டு எது? = கி.பி 1782

ஹைதர் அலி எந்த நோயால் தாக்கப்பட்டு இறந்தார்? = புற்றுநோய்

இரண்டாம் ஆங்கில-மைசூர் போர் எந்த உடன்படிக்கையால் முடிவுக்கு கொண்டு வரப்பட்டது? = மங்களூர் உடன்படிக்கை

மங்களூர் உடன்படிக்கை ஏற்பட்ட ஆண்டு எது? = கி.பி 1784

## முதலாம் ஆங்கில-மராத்தியப் போர் (கி.பி 1775 - கி.பி 1782):

எந்த இரு பேஷ்வாக்கு இடையே கி.பி.1775 ஆம் ஆண்டு பேஷ்வா பதவிக்கான போட்டி நிலவியது? = மாதவராவ் மற்றும் அவரது சித்தப்பா ரகுநாத ராவ்

பிரிட்டிஷ் அரசு எந்த ஆண்டின் போது ரகுநாத ராவுடன் சூரத் உடன்படிக்கையை செய்து கொண்டது? = கி.பி.1775

வாரன்ஹேஸ்டிங்ஸ் கி.பி.1776 ஆண்டு கர்னல் அப்டனை அனுப்பி சூரத் உடன்படிக்கையை ரத்து செய்து விட்டு எந்த மராட்டிய மன்னருடன் புரந்தர் உடன்படிக்கையை செய்து கொண்டார்? = நானா பட்னாவிஸ்

வாரன் ஹேஸ்டிங்ஸ் அவர்கள் மராத்தியர்கள் மீது போர் தொடுத்த ஆண்டு எது? = கி.பி 1775

எந்த உடன்படிக்கை மூலம் முதலாம் ஆங்கில-மராத்தியப் போர் முடிவுக்கு கொண்டுவரப்பட்டது? = சால்பை உடன்படிக்கை

சால்பை உடன்படிக்கை ஏற்பட்ட ஆண்டு எது? = கி.பி 1782

சால்பை உடன்படிக்கையானது எந்த இருவருக்கும் ஏற்பட்டது? = வாரன்ஹேஸ்டிங்ஸ் மற்றும் மகாதஜி சிந்தியா

முதலாம் மராத்திய போருக்கு பிறகு மராத்தியர்களின் பீஷ்வாகப் பொறுப்பேற்றவர் யார்? = இரண்டாம் மாதவராவ்

கி.பி.1787 ஆம் ஆண்டு எந்த கட்சியினரால் வாரன்ஹேஸ்டிங்ஸ் மீது அதிகார வரம்பு மீறல்களைக் காரணமாக காட்டி நாடாளுமன்றத்தில் குற்றச்சாட்டு கொண்டுவரப்பட்டது? = எட்மண்ட் பர்க் மற்றும் விக் கட்சி

எட்மண்ட் பர்க் அவர்கள் வாரன்ஹேஸ்டிங்ஸ் மீது எத்தனை குற்றங்களை சுமத்தினார்? = 22 குற்றங்கள்

வாரன் ஹேஸ்டிங் மீது சுமத்தப்பட்ட 3 குற்ற விசாரணைகள் எது? = 1) நந்தகுமார் வழக்கு விசாரணை (கி.பி 1775); 2) செயித் சிங் விவகாரம் (கி.பி 1775); 3) அயோத்தி பேகம்களின் வழக்கு (கி.பி 1782) ஆகியவை

பொது நிர்வாக முறையின் அடித்தளத்தை வாரன்ஹேஸ்டிங்கஸ் அமைக்க அதன் மீது மேற்கட்டுமானம் காரன்வாலிஸால் ஏற்படுத்தப்பட்டது என்று கூறிய அறிஞர் யார்? = சர் வில்லியம் ஹண்டர்

வாரன்ஹேஸ்டிங் காலத்தில் இயற்றப்பட்ட இந்து சட்டத்தொகுப்பானது 'ஆங்கில இந்து சட்டங்களின் தொகுப்பு' என்ற பெயரில் யாரால் உருவாக்கப்பட்டது? = ஹால்ஹெட்

கி.பி.1784 ஆம் ஆண்டு வாரன் ஹேஸ்டிங்ஸ் உடன் இணைந்து வங்காள ஆசிய கழகத்தினை தோற்றுவித்தவர் யார்? = வில்லியம் ஜோன்ஸ்

பெங்கால் கெசட் என்ற ஆங்கில வார இதழை தொடங்கியவர் யார்? = ஜேம்ஸ் அகஸ்டஸ் ஹிக்கி (கி.பி.1780)

## காரன்வாலிஸ் பிரபு (கி.பி 1786 - கி.பி 1793) :

காரன்வாலிஸ் அவர்கள் எந்த ஆண்டு இந்தியாவின் தலைமை ஆளுநராக நியமிக்கப்பட்டார்? = கி.பி 1786

இந்தியாவில் இருந்த சுதேசி சாம்ராஜ்யத்தில் தலையிடாக் கொள்கையைப் பின்பற்ற முயன்ற தலைமை ஆளுநர் யார்? = காரன்வாலிஸ் பிரபு

நிலையான நிலவரி திட்டத்தை கொண்டுவந்த தலைமை ஆளுநர் யார்? = காரன்வாலிஸ் பிரபு

காரன் வாலிஸ் அவர்கள் எந்த ஆண்டு நிலையான நிலவரி திட்டத்தை கொண்டுவந்தார்? = கி.பி 1793

காரன்வாலிஸ் அவர்கள் நிலையான நிலவரி திட்டத்தை அறிமுகப்படுத்திய இடம் எது? = வங்காளம்

நிலையான நிலவரி திட்டத்தின் மூலம் அதிக இலாபம் அடைத்தவர்கள் யார்? = ஜமீன்தார்கள்

இந்தியக் குடிமையியல் பணியின் தந்தை என்றழைக்கப்பட்ட தலைமை ஆளுநர் யார்? = காரன்வாலிஸ் பிரபு

இந்தியாவில் நிலையான காவல்துறையை உருவாக்கியவர் யார்? = காரன்வாலிஸ் பிரபு

கல்கத்தாவில் காவல்துறை ஆணையர் நியமனம் உருவாக்கப்பட்ட ஆண்டு எது? = கி.பி 1791

மாவட்டங்கள் தானாக்களாக பிரிக்கப்பட்ட பிறகு எந்த அதிகாரியால் தானாக்கள் நிர்வகிக்கப்பட்டன? = தரோகா

எந்த தலைமை ஆளுநர் ஆட்சியின் போது மாவட்ட ஆட்சியர், நீதிப்பணியிலிருந்து விடுவிக்கப்பட்டார்? = காரன்வாலிஸ் பிரபு

காரன்வாலிஸ் அவர்கள் எந்த இடங்களில் நான்கு மாகாண நீதிமன்றங்களை ஏற்படுத்தினார்? = டாக்கா, கல்கத்தா, முர்ஷிதாபாத் மற்றும் பாட்னா

எந்த தலைமை ஆளுநர் பதவி வகிக்கும் போது நீதிமன்றங்களுக்கு கட்டவேண்டிய கட்டணங்களை ரத்து செய்யப்பட்டது? = காரன்வாலிஸ் பிரபு

'காரன்வாலிஸ் சட்டத் தொகுப்பு' தொகுத்து வெளியிடப்பட்ட ஆண்டு எது? = கி.பி 1793

'காரன்வாலிஸ் சட்டத் தொகுப்பினை' - வெளியிட்டவர் யார்? = சர் ஜார்ஜ் பார்லோ

ஆங்கிலேயர்கள் இந்திய வியாபாரிகளோடு நேரிடையாக பொருள் வாங்கும் அல்லது விற்கும் முறையினை மீண்டும் அறிமுகம் செய்தவர் யார்? = காரன்வாலிஸ் பிரபு

எந்த ஆண்டின் போது வங்காளம் பல பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு பிரிவும் ஒரு ஆட்சியரின் கீழ் நிர்வகிக்கப்பட்டது? = கி.பி 1787

எந்த தலைமை ஆளுநர் தன் ஆட்சியின் போது வருவாய்த்துறையை உருவாக்கி ஆட்சியர்களின் செயல்பாட்டினை மேற்பார்வயிடச் செய்தார்? = காரன்வாலிஸ் பிரபு

இந்தியாவை இரண்டு முறை ஆட்சி செய்த வங்காள தலைமை ஆளுநர் யார்? = காரன்வாலிஸ் பிரபு

இந்திய தலைமை ஆளுநர்களின் ஊழலற்ற, நேர்மையான முதல் ஆளுநராக கருதப்படுபவர் யார்? = காரன்வாலிஸ் பிரபு

நிர்வாகம் மற்றும் நீதித்துறையின் அதிகாரங்களை பிரித்த முதல அளுநர்? = காரன்வாலிஸ் பிரபு

மாவட்ட நீதிபதி என்ற பதவியினை உருவாக்கிய தலைமை ஆளுநர் யார்? = காரன்வாலிஸ் பிரபு

'இந்திய ஆட்சிப் பணித்துறையின் தந்தை' (IAS) - என அழைக்கப்படுபவர் யார்? = காரன்வாலிஸ் பிரபு

கி.பி.1791 ஆம் ஆண்டு பனாரஜில் சமஸ்கிருத கல்லூரியை தொடங்கியவர் யார்? = காரன்வாலிஸ் பிரபு

## திப்பு சுல்தான்:

திப்பு சுல்தான் பிறந்த ஆண்டு எது? = கி.பி 1753

திப்பு சுல்தான் பிறந்த இடம் எது? = மைசூர்

திப்பு சுல்தான் கட்டிய புகழ்பெற்ற கோட்டை எது? = நீலகிரியில் உள்ள தூர்க் கோட்டை

திப்பு சுல்தான் அவர்கள் எந்த சிறப்பு பெயரால் பெருமையோடு அழைக்கப்பட்டார்? = மைசூரின் புலி

திப்பு சுல்தானின் அன்புக்குரிய மிருகம் எது? = புலி

எந்த மன்னரின் அரியணை மற்றும் சீருடையிலும் புலியின் உருவம் பொறிக்கப்பட்டிருந்தது? = திப்பு சுல்தான்

திப்பு இறந்த பிறகு அடக்கம் செய்யப்பட்ட இடம் எது? = சீரங்கப்படினம்

## மூன்றாவது ஆங்கில-மைசூர் போர் (கி.பி 1790 - கி.பி 1792)

இரண்டாவது மைசூர் போரின் முடிவில் திப்பு சுல்தானும் ஆங்கிலேயர்களும் தங்களுடைய அரசியல் ஆதிக்கத்தை எங்கு நிலைநிறுத்த முயன்றனர்? = தக்காணம்

திப்பு சுல்தான் தன்னை பலப்படுத்திக் கொண்டு எந்த இரு நாட்டு உதவியோடு ஆங்கிலேயர்களை இந்தியாவிலிருந்து வெளியேற்ற எண்ணினார்? = பிரான்சு மற்றும் துருக்கி

காரன்வாலிஸ் அவர்கள் எந்த இரு மன்னர்களின் உதவியோடு மூன்றாம் ஆங்கில மைசூர் போரில் திப்புவை எதிர்த்தார்? = ஹைதராபாத் நிஜாம் மற்றும் மராத்தியர்கள்

மூன்றாவது ஆங்கிலேய மைசூர் போரின் போது திப்பு சுல்தான் தென்னிந்தியாவிலிருந்த எந்த நாட்டைச் சார்ந்த இந்து அரசரை தோற்கடித்தார்? = திருவாங்கூர்

எந்த ஆண்டின் போது காரன்வாலிஸ் திப்பு சுல்தானுக்கு எதிராக போர் தொடுத்தார்? = கி.பி 1790

மூன்றாம் ஆங்கில-மைசூர் போர் முடிவுக்கு வந்த ஆண்டு எது? = கி.பி 1792

எந்த உடன்படிக்கையின் படி மூன்றாம் ஆங்கில-மைசூர் போரானது முடிவுக்கு வந்தது? = ஸ்ரீரங்கப்பட்டின உடன்படிக்கை (கி.பி 1792)

காரன்வாலிஸ் பிரபுக்கு பிறகு வங்காளத்தின் கவர்னராக பதவியேற்றவர் யார்? = சர் ஜான்ஷோர்

காரன்வாலிஸ் பிரபு போன்று தலையிடாக் கொள்கையை பின்பற்றி ஆட்சி செய்த வங்காள கவர்னர் யார்? = சர் ஜான்ஷோர் (கி.பி.1793 - கி.பி.1798)

கி.பி.1793 ஆம் ஆண்டு பட்டயச் சட்டத்தினை ((முதல் பட்டயச் சட்டம்) இயற்றிய தலைமை ஆளுநர் யார்? = சர் ஜான்ஷோர்

## வெல்லெஸ்லி பிரபு (கி.பி 1796 - கி.பி 1805)

சர் ஜான்ஷோர் பிறகு வங்காள கவர்னராக பதவியேற்றவர் யார்? = வெல்லெஸ்லி பிரபு

இந்தியாவில் ஆங்கில பேரரசை உருவாக்க வெல்லெஸ்லி பிரபு எந்த கொள்கையை பின்பற்றினார்? = பேரரசுக் கொள்கை

தம்மை வங்கப்புலி என்று கூறிக்கொண்ட வங்காள ஆளுநர் யார்? = வெல்லெஸ்லி பிரபு

பிரெஞ்சு நாட்டு நெப்போலியனின் எழுச்சியால் மிகுந்த அச்சம் அடைந்த தலைமை ஆளுநர் யார்? = வெல்லெஸ்லி பிரபு

வெல்லெஸ்லி பிரபு அவர்கள் எந்த திட்டத்தை அறிமுகப்படுத்தி ஆங்கில பேரரசை நிலை பெறச் செய்தார்? = துணைப்படைத் திட்டம் (கி.பி.1798)

வெல்லெஸ்லி பிரபு அவர்கள் எந்த திட்டத்தின் மூலம் இந்தியாவில் ஆட்சி செய்து வந்த சுதேச சாம்ராஜ்யங்களை ஆங்கில அரசாட்சியின் கீழ் கொண்டுவர எண்ணினார்? = துணைப்படைத் திட்டம்

வெல்லெஸ்லி பிரபுவால் அறிமுகம் செய்யப்பட்ட எந்த திட்டத்தின் படி இந்திய சுதேச அரசர்கள் தங்களது நாட்டில் ஆங்கில படை ஒன்றை அதன் நிர்வாக செலவிற்கான பணத்தை செலுத்தியோ, தங்களது நிலப்பகுதிகளில் சிலவற்றை ஆங்கிலேயருக்கு கொடுப்பதன் மூலமாகவோ பராமரிக்க வேண்டும்? = துணைப்படைத் திட்டம்

வெல்லெஸ்லியின் துணைப்படைத் திட்டத்தை ஏற்றுக்கொண்ட முதல் இந்திய மன்னர் யார்? = ஹைதராபாத் நிஜாம் (கி.பி 1798)

துணைப்படைத் திட்டத்தின் மூலம் ஹைதராபாத் நிஜாம் அவர்கள் ஆங்கிலேயர்களுக்கு அளித்த நிலப்பகுதிகள் எது? = பெல்லாரி, கடப்பா, அனந்தபூர் மற்றும் கர்னூல் (கி.பி 1800)

எந்த மன்னரை வென்னெஸ்லி பிரபு அவர்கள் கட்டாயப்படுத்தி துணைப்படைத் திட்டத்தை ஏற்க செய்தார்? = அயோத்தி நவாப்

துணைப்படைத் திட்டத்தின் மூலம் அயோத்தி நவாப் அவர்கள் ஆங்கிலேயர்களுக்கு அளித்த நிலப்பகுதிகள் எது? = ரோஹில்கண்ட், கோரக்பூர் மற்றும் கங்கை யமுனை நதிகளுக்கு இடையே உள்ள நிலப்பகுதிகள்

வெல்லெஸ்லியின் துணைப்படைத் திட்டத்தை ஏற்றுக்கொண்ட மராத்திய மன்னர் யார்? = இரண்டாம் பாஜிராவ்

வெல்லெஸ்லி துணைப்படைத் திட்டத்தை ஏற்க மறுத்த மன்னர் யார்? = திப்பு சுல்தான்

## நான்காவது ஆங்கில-மைசூர் போர் (கி.பி.1799):

நான்காவது ஆங்கில மைசூர் போர் நடைபெறக் காரணம்? = வெல்லெஸ்லி பிரபுவின் துணைப்படைத் திட்டம்

திப்பு சுல்தான் ஆங்கிலேயர்களை எதிர்க்க எந்தெந்த மன்னர்களின் ஆதரவுகளை பெற தூதுவர்களை அனுப்பினார்? = காபூல், கான்ஸ்டான்டிநோபிள், அரேபியா

நான்காவது ஆங்கில மைசூர் போரின் முடிவில் திப்பு சுல்தான் அவர்கள் எந்த இடத்தில் தோற்கடிக்கப்பட்டு கொல்லப்பட்டார்? = மாளவள்ளி போர்

மாளவள்ளி போர் நடைபெற்ற ஆண்டு எது? = கி.பி.1799

திப்பு சுல்தான் இறந்த ஆண்டு எது? = கி.பி.1799 - மே 4

நான்காவது ஆங்கில மைசூர் போரின் முடிவில் ஆங்கிலேயர்களால் இணைக்கப்பட்ட நிலப்பகுதிகள் எது? = ஸ்ரீரங்கப்பட்டினம், கோயம்புத்தூர் மற்றும் கனரா

நான்காவது ஆங்கில மைசூர் போரின் முடிவில் ஆங்கிலேயரால் கைப்பற்றப்பட்ட மைசூர் அரசானது யாரிடம் திரும்ப அளிக்கப்பட்டது? = பழைய இந்து வம்ச மன்னர் குடும்பத்தில் பிறந்த மூன்றாம் கிருஷ்ணா ராஜா

நான்காவது ஆங்கில மைசூர் போரின் முடிவில் திப்புவின் குடும்பத்தினர் எந்த சிறைக்கு கைதிகளாக எங்கு அனுப்பப்பட்டனர்? = வேலூர்

## இரண்டாவது ஆங்கில மராத்திய போர் (கி.பி.1803)

இரண்டாம் பாஜிராவ் அவர்கள் வெல்லெஸ்லியின் துணைப்படைத் திட்டத்தை ஏற்றுக் கொண்டு எந்த உடன்படிக்கையில் கையொப்பமிட்டார்? = பஸ்ஸின் உடன்படிக்கை

பஸ்ஸின் உடன்படிக்கையை ஏற்க மறுத்த மராத்திய தேசத் தலைவர்கள் யார்? = சிந்தியா மற்றும் பான்ஸ்லே

எந்த ஆண்டின் போது வெல்லெஸ்லி அவர்கள் அசே மற்றும் ஆரிகான் ஆகிய இடங்களில் மராத்தியர்களை தோற்கடித்தனர்? = கி.பி.1803

வணிக நிறுவனமாக விளங்கிய ஆங்கிலக் கிழக்கிந்திய நிறுவனத்தை இந்தியாவில் வலிமை மிகுந்த ஓர் அரசியல் சக்தியாக மாற்றியமைத்த கவர்னர் யார்? = வெல்லெஸ்லி பிரபு

'இந்தியாவில் பிரிட்டிஸ் அரசு' என்பதற்கு பதில் 'பிரிட்டிஷ் இந்திய பேரரசு' என்ற ஒன்றை உருவாக்க வேண்டும் என தீர்மானத்துடன் இந்தியா வந்த ஆளுநர் யார்? = வெல்லெஸ்லி

பசீன் உடன்படிக்கையில் கையெழுத்திட்ட பேஷ்வா யார்? = இரண்டாம் பாஜிராவ்

இந்தியாவில் பிரெஞ்சு ஆதிக்கத்திற்கு முடிவு கட்டிய தலைமை ஆளுநர் யார்? = வெல்லெஸ்லி பிரபு

'ஆங்கிலேய கிழக்கிந்திய வணிக்க்குழுவின் அக்பர்' - என அழைக்கப்பட்டவர் யார்? = வெல்லெஸ்லி பிரபு

## சர் ஜார்ஜ் பார்லோ (கி.பி.1805 - கி.பி.1807):

ஆங்கிலேயர் தளபதி ஆர்தர் வெல்லெஸ்லி பிறகு இந்திய தலைமை ஆளுநராக பதவியேற்றுக் கொண்டவர் யார்? = சர் ஜார்ஜ் பார்லோ (கி.பி.1805 - கி.பி.1807)

வேலுர் கலகம் நடக்கும் போது ஆங்கிலேய தலைமை கவர்னராக இருந்தவர் யார்? = சர் ஜார்ஜ் பார்லோ

## வேலூர்க் கலகம் (கி.பி.1806):

தமிழ்நாட்டின் முந்தைய வட ஆற்காடு மாவட்டத்தின் தலைநகர் எது? = வேலூர்

வேலூர் கலகமானது யாரால் நடத்தப்பட்டது? = சிப்பாய்கள்

வேலூர் கலகத்தின் போது சென்னை ஆளுநராக இருந்தவர் யார்? = வில்லியம் பெண்டிங் பிரபு

வில்லியம் பெண்டிங் அனுமதியுடன் தலைப்பாகையுடன் கூடிய புதிய சீருடைய அறிமுகப்படுத்திய படைத்தளபதி யார்? = ஜான் கிராடக்

ஜான் கிராடக் அறிமுகப்படுத்திய தொப்பியானது எந்த நாட்டின் தொப்பி போன்று காணப்பட்டது? = ஐரோப்பியர்

ஆங்கிலேயரிடம் ஜீன் 17, 1806 ஆம் ஆண்டு வேலூர் கலகத்தை பற்றி தன் உயர் அதிகாரியான கர்னல் போர்ப்ஸிடம் கூறிய இராணுவச்சிப்பாய் யார்? = முதல் படை பிரிவைச் சேர்ந்த முஸ்தபா பெக்

கி.பி.1806 ஆம் ஆண்டு ஜீலை 10 அன்று எந்த படைப்பிரிவை சேர்ந்த சிப்பாய்கள் வேலூர் கலகத்தை தொடங்கினர்? = முதல் மற்றும் 23 ஆம் படைப்பிரிவு

சிப்பாய்களால் கொல்லப்பட்ட ஆங்கில இராணுவ அதிகாரி யார்? = கர்னல் பான்கோட்

அணிவகுப்பு மைதானத்தில் சுட்டு வீழ்த்தப்பட்ட 23 வது படைப்பிரிவு இராணுவ அதிகாரியின் பெயர் யாது? = கர்னல் மி.கேரஸ்

வேலூர் கலகத்தின் போது மூன்றாவதாக கொல்லப்பட்ட இராணுவ அதிகாரி யார்? = மேஜர் ஆம்ஸ்ட்ராங்

வேலூர் கலகத்தின் போது ஏறத்தாழ எத்தனை இராணுவ அதிகாரிகள் கொல்லப்பட்டனர்? = 12 மேற்பட்ட

கலகம் ஏற்பட்ட போது வேலூர் கோட்டைக்கு வெளியே இருந்த இராணுவத் தளபதி யார்? = மேஜர் கூட்ஸ்

மேஜர் கூட்ஸ் அவர்கள் வேலூர் புரட்சியை பற்றி எந்த இராணுவத் தளபதியிடம் கூறினார்? = கர்னல் ஜில்லஸ்பி

கிளர்ச்சியாளர்கள் யாரை புதிய சுல்தானாக அறிவித்தனர்? = திப்பு சுல்தான் மூத்த மகன் பதே ஹைதர்

பதே ஹைதர் வேலூர் கலகத்தில் தோற்கடிக்கப்பட்டு எந்த நகரத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டார்? = கல்கத்தா

வேலூர்க்கலகம் கி.பி.1857 ஆம் ஆண்டு சிப்பாய் கலகத்துக்கு வழிவகுத்தது என்ற கூற்றை கூறியவர்? = கே.கே.பிள்ளை

1857 ஆம் ஆண்டு முதல் இந்திய சுதந்திர போருக்கு வேலூர் கலகம் முன்னோடி என்று கூறியவர்? = சவார்க்கர்

இந்திய விடுதலைக்கு தமிழர்களே முன்னோடிகளாகத் திகழ்ந்தனர் என்று கூறியவர்? = என்.சஞ்சீவி

காலனியாதிக்கத்தை எதிர்த்து மருது சகோதரர்கள் நடத்திய போராட்டத்தின் தொடர்ச்சியே வேலூர் கலகம் என்று கூறியவர் யார்? = கே.ராசய்யன்

சர் ஜார்ஜ் பார்லோ பிறகு இந்திய ஆளுநராக பதவியேற்றவர் யார்? = முதலாம் மிண்டோ பிரபு (கி.பி.1807 - கி.பி.1813)

### மார்குவிஸ் ஹேஸ்டிங்ஸ் (கி.பி.1813 - கி.பி.1823):

முதலாம் மிண்டோவிற்கு பிறகு கவர்னராக பதவியேற்றவர் யார்? = ஹேஸ்டிங்ஸ் பிரபு

யாருடைய ஆட்சிக் காலத்தில் இரண்டாம் பட்டயச் சட்டமானது (கி.பி.1813) நிறைவேற்றப்பட்டது? = முதலாம் மிண்டோ பிரபு

இந்தியாவில் பிரிட்டிஷ் அரசை முதன்மையானதாக உண்மையில் மாற்றியவர் யார்? = மார்குவிஸ் ஹேஸ்டிங்ஸ்

இரண்டாம் ஆண்டு பட்டயச்சட்டம் நிறைவேற்றப்பட்ட ஆண்டு எது? = கி.பி.1813

கி.பி.1813 ஆம் ஆண்டு பட்டயச்சட்டத்தின் முக்கிய அம்சங்கள்:

1) ஆங்கில கிழக்கிந்திய கம்பெனியின் வியாபார உரிமம் 20 ஆண்டுகளுக்கு நீடிக்கப்பட்டது
2) இந்தியர்களின் கல்வி வளர்ச்சிக்காக ஆண்டு தோறும் ரூ.1 இலட்சம் வழங்கப்பட்டது
3) கிறித்துவர்கள் தன் சமயத்தை பரப்புவதற்கு அனுமதி பெற்றனர்

## கூர்க்கா போர் (அ) நேபாள போர் (கி.பி.1814 - கி.பி.1816)

நேபாளத்தை சேர்ந்த எந்த இனத்தை சேர்ந்தவர்கள் ஆங்கிலேயர்களுக்கு பெரும் சவாலாக விளங்கினர்? = கூர்க்கர்கள்

எந்த ஆண்டின் போது கூர்க்கர்கள் ஷெரோஜ் மற்றும் பத்வால் பகுதிகளை கைப்பற்றினர்? = கி.பி.1814

எந்த ஆண்டின் போது கூர்க்கர்கள் பிரிட்டிஷ் காவல் நிலையத்தை தாக்கி அங்கிருந்த அதிகாரியையும் 18 காவலர்களையும் கொன்றனர்? = கி.பி.1814

ஆங்கிலெயர் கூர்க்கர் இனத்தவரான யாரை தோற்கடித்தனர்? = அமர்சிங்க்

கூர்க்கர்களின் இனத்தலைவரான அமர்சிங்கை தோற்கடித்த ஆங்கில தளபதி யார்? = ஆக்டர் லோனி

ஆங்கிலேய தளபதி ஆக்டர்லோனி கூர்க்கர் இனத்தலைவனான அமர்சிங்கை எந்த இடத்தில் தோற்கடித்தார்? = அல்மோரா

கி.பி.1816 ஆம் ஆண்டு கூர்க்கர்கள் ஆங்கிலேயர்களோடு எந்த அமைதி உடன்படிக்கையில் கையொப்பமிட்டனர்? = சௌகாலி உடன்படிக்கை

எந்த போரில் ஹேஸ்டிங்ஸ் வெற்றி பெற்றதால் அவருக்கு மார்குயிஸ் என்ற பட்டம் வழங்கப்பட்டது? = கூர்க்கா போர்

## பிண்டாரிகள் போர் (கி.பி.1816 - கி.பி.1818):

மத்திய இந்திய பகுதியில் வாழ்ந்த கொள்ளைக் கூட்டத்தினர் யார்? = பிண்டாரிகள்

பிண்டாரிகளின் தலைவர்களாக பதவி வகித்தவர்கள் யார்? = அமிர்கான், வாசில் முகமது, கரிம்கான் மற்றும் சேட்டு

எந்த தலைமை ஆளுநர் இருந்த பொழுது ஒரு பெரும் ஆங்கில படை பிண்டாரிகளுக்கு எதிராக அனுப்பப்பட்டு அவர்கள் தோற்கடிக்கப்பட்டனர்? = ஹேஸ்டிங்ஸ் பிரபு

பிண்டாரிகளின் தலைவர்களில் சரணடைந்த தலைவர் யார்? = கரீம்கான்

பிண்டாரிகளை அடக்க ஹேஸ்டிங்ஸ் அனுப்பிய படைகளில் வடக்கு பகுதி படைக்கு தலைமை தாங்கிய தளபதி யார்? = ஹேஸ்டிங்சே

பிண்டாரிகளை அடக்க ஹேஸ்டிங்ஸ் அனுப்பிய படைகளில் தெற்கு பகுதி படைக்கு தலைமை தாங்கிய தளபதி யார்? = சர் தாமஸ் வாஸ்லா

புலியால் அடித்து கொல்லப்பட்டதாக கூறப்பட்ட பிண்டாரிகளின் தலைவன் யார்? = சேட்டு

பூனா ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்ட ஆண்டு எது? = கி.பி.1817

நான்காம் ஆங்கிலேய-மராத்திய போர் நடைபெற்ற ஆண்டு எது? = கி.பி.1817 - கி.பி.1818

பீஷ்வா இரண்டாம் பாஜிராவ் அவர்கள் எந்த ஆண்டின் இறுதியில் பூனாவிலிருந்த ஆங்கிலப் பிரதிநிதியைக் கொலை செய்தார்? = கி.பி.1817

எந்த போருக்கு பிறகு பீஷ்வா பதவியானது முற்றிலுமாக முடிவுக்கு வந்தது? = நான்காம் ஆங்கில மராத்திய போர்

நான்காம் ஆங்கில மராத்திய போரின் முடிவுக்கு பின் இரண்டாம் பாஜிராவிற்கு எவ்வளவு ரூபாய் ஓய்வூதியமாக வழங்கப்பட்டது? = ரூ.8 இலட்சம்

மராத்திய நிலப்பகுதியில் எந்த சிற்றரசை உருவாக்கி சத்ரபதி சிவாஜியின் வாரிசான பிரதாப் சிங்கை அரசராக ஆங்கில அரசு பிரகடனப்படுத்தியது? = சதாரா

ஹேஸ்டிங்ஸ் பிரபு அவர்கள் எந்த ஆண்டின் போது வங்காள குத்தகைச் சட்டத்தை நிறைவேற்றி விவசாயிகளின் நலனைப் பாதுகாத்தார்? = கி.பி.1822

வட்டார மொழிப் பத்திரிக்கை தடைச்சட்டத்தை நீக்கி, சமாச்சார் பத்திரிக்கை என்ற செய்தித்தாள் வெளிவர காரணமாக இருந்தவர் யார்? = ஹேஸ்டிங்ஸ் பிரபு

சமாச்சர் பத்திரிக்கை என்ற செய்தித்தாள் வெளியிடப்பட்ட ஆண்டு எது? = கி.பி.1818

சமாச்சார் என்ற வங்காள வாரமொழி இதழை தோற்றுவித்தவர் யார்? = மார்ஷ்மேன்

யாருடைய ஆட்சிக்காலத்தில் சென்னை மாகாணத்தில் இரயத்துவாரி முறையானது அறிமுகம் செய்யப்பட்டது? = ஹேஸ்டிங்ஸ் பிரபு

எந்த திட்டத்தின் படி விவசாயிகள் நிலவரியை முறையாக அரசாங்கத்திற்கு செலுத்தினால் அவர்கள் நிலத்தின் சொந்தக்காரர்களாக கருதப்பட்டனர்? = இரயத்துவாரி முறை (20 வருடம்)

இரயத்துவாரி முறையை சென்னையில் அறிமுகம் செய்த ஆங்கில தளபதி யார்? = சர் தாமஸ் மன்றோ

இரயத்துவாரி முறை காணப்பட்ட பகுதிகள் யாது? = சென்னை, மும்பை, அசாம்

எந்த ஆண்டின் போது சென்னையில் இரயத்துவாரி முறையானது அறிமுகம் செய்யப்பட்டது? = கி.பி.1822

வெல்லெஸ்லி பெற்ற வெற்றிகளை ஒன்றிணைத்து முழுமைப்படுத்தியவர் யார்? = ஹேஸ்டிங்ஸ் பிரபு

### ஆர்ம்ஹெர்ஸ்ட் பிரபு (கி.பி.1823 - கி.பி.1828):

ஹேஸ்டிங்ஸ் பிறகு ஆங்கில கிழக்கிந்திய கம்பெனிக்கு தலைமை ஆளுநராக பொறுப்பேற்றவர் யார்? = ஆர்ம்ஹெர்ஸ்ட் பிரபு

### முதலாம் பர்மிய போர் (கி.பி.1824 - கி.பி.1826)

ஆர்ம்ஹெர்ஸ்ட் பிரபு காலத்தில் எந்த நகரை கைப்பற்ற பர்மியர்கள் முயற்சித்தனர்? = அசாம்

ஆர்ம்ஹெர்ஸ்ட் பிரபு எந்த ஆண்டின் போது பர்மியர்களின் மீது போர் தொடுத்தார்? = கி.பி.1824

முதலாம் பர்மிய போரானது எந்த ஆண்டு முடிவுக்கு வந்தது? = கி.பி.1826

எந்த உடன்படிக்கையின் படி முதலாம் பர்மிய போரானாது முடிவுக்கு வந்தடைந்தது? = யாண்டேபூ உடன்படிக்கை (கி.பி.1826)

முதலாம் பர்மிய போரின் முடிவில் ஆங்கிலேயர்கள் எந்த இரு பகுதிகளை வென்றனர்? = அரக்கான் மற்றும் டெனாசரிம்

### வில்லியம் பெண்டிங் பிரபு (கி.பி.1828 - கி.பி.1835)

ஆர்ம்ஹெர்ஸ்ட் பிரபு பிறகு இந்தியாவின் தலைமை ஆளுநராக பதவியேற்றவர் யார்? = வில்லியம் பெண்டிங் பிரபு

இந்திய தலைமை ஆளுநர்களில் தலைச்சிறந்தவராக கருதப்படுபவர் யார்? = வில்லியம் பெண்டிங் பிரபு

எந்த ஆண்டின் போது வில்லியம் பெண்டிங் அவர்கள் சென்னையின் ஆளுநராக நியமிக்கப்பட்டார்? = கி.பி.1803

இந்திய மக்களின் நலனைப் பெணுவதே இந்தியாவில் ஆளும் பிரிட்டிஷாரின் தலையாய கடமை என்ற கருத்தை அடிப்படையாக்க் கொண்டு செயல்பட்ட முதல் தலைமை ஆளுநர் யார்? = வில்லியம் பெண்டிங் பிரபு

ஆங்கில கிழக்கிந்திய கம்பெனியின் நிதி நிலைமையை மேம்படுத்த வில்லியம் பெண்டிங் பிரபு அவர்கள் யாருடைய ஊதியத்தை குறைத்தார்? = குடிமை ஊழியர்கள்

வில்லியம் பெண்டிங் பிரபு அவர்கள் எந்த வியாபாரத்தினை முறைப்படுத்தி கம்பெனியின் வருவாயைப் பெருக்கினார்? = அபினி வியாபாரம்

மாநில மேல்முறையீட்டு வழக்குகளுக்காக்க் சாதர் திவானி அதலாத் மற்றும் குற்றவியல் வழக்குகளுக்காகச் சாதர் நிஜாமத் அதாலத் என்ற மேல்முறையீட்டு நீதிமன்றங்களை வில்லியம் பெண்டிங் பிரபு அவர்கள் எந்த நகரில் நிறுவினார்? = அலகாபாத்

மாவட்ட ஆட்சியர் மற்றும் நீதிபதி பதவிகளை ஒருங்கிணைத்த தலைமை ஆளுநர் யார்? = வில்லியம் பெண்டிங் பிரபு

இந்திய நீதிமன்றங்ளில் பயன்பட்டுவந்த பாரசீக மொழிக்கு பதில் வட்டார மொழிகளை புகுத்திய தலைமை ஆளுநர் யார்? = வில்லியம் பெண்டிங் பிரபு

தலைமை ஆளுநரின் நிர்வாகக் குழுவில் வில்லியம் பெண்டிங் பிரபு அவர்களால் புதியதாக நியமனம் செய்யப்பட்ட சட்ட உறுப்பினர் யார்? = மெக்காலே பிரபு

மெக்காலே கல்வியறிக்கை வெளியிடப்பட்ட ஆண்டு எது? = கி.பி.1835

வில்லியம் பெண்டிங் அவர்களுக்கு பெரும் புகழைத் தேடிந்தது எது? = சமூக சீர்திருத்தங்கள்

சதி என்னும் கொடிய பழக்கமானது எந்த மன்னர்களிடையே அதிகமாக காணப்பட்டது? = இராஜபுத்திரர்கள்

எந்த சமூக சீர்திருத்தவாதி உதவியோடு வில்லியம் பெண்டிங் அவர்கள் சதி என்னும் கொடிய பழக்கத்தை அழிக்க சதி ஒழிப்புச் சட்டத்தினை கொண்டு வந்தார்? = இராஜாராம் மோகன்ராய்

எந்த ஆண்டு சதி ஒழிப்புச் சட்டமானது கொண்டு வரப்பட்டது? = கி.பி.1829 - டிசம்பர் 4

சதி ஒழிப்புச் சட்டமானது சென்னை, பம்பாய் மாகாணங்களுக்கு எந்த ஆண்டின் போது விரிவுப்படுத்தப்பட்டது? = கி.பி.1830

எந்த இரு நிலப்பகுதிகளில் வாழ்ந்த மக்களிடையே பெண்சிசுக் கொலை என்னும் மற்றொரு கொடிய பழக்கமானது காணப்பட்டது? = கத்தியவார் மற்றும் இராஜஸ்தான்

பெண்சிசுக் கொலையை ஒழித்து மட்டுமின்றி அது மாபெரும் குற்றம் என அறிவித்த இந்திய ஆளுநர் யார்? = வில்லியம் பெண்டிங் பிரபு

எந்த நிலப்பகுதியில் வாழ்ந்த மலைவாழ் இனமக்களிடையே நரபலியிடும் கொடிய பழக்கம் இருந்தது? = ஒடிசா

நரபலியிடுதல் பழக்கத்தை தடுத்த இந்திய தலைமை ஆளுநர் யார்? = வில்லியம் பெண்டிங் பிரபு

தக்கர்கள் இந்தியாவில் எப்பகுதியில் வாழ்ந்து வந்தனர்? = மத்திய இந்தியா

தக்கர்கள் செய்து வந்த தொழில் எது? = கொள்ளை அடித்தல்

வில்லியம் பெண்டிங் பிரபு அவர்கள் தக்கர்களின் நடவடிக்கைகளை தடுக்க யார் தலைமையில் தனியாக ஒருதுறையை தோற்றுவித்து அவர்களை முற்றிலுமாக ஒழித்தார்? = மேஜர் ஸ்லீமென்

எந்த தலைமை ஆளுநர் காலத்தில் கல்கத்தாவில் மருத்துவ கல்லூரியும், பம்பாயில் எல்பின்ஸ்டன் கல்லூரியும் நிறுவப்பட்டது? = வில்லியம் பெண்டிங் பிரபு (கி.பி.1835)

வில்லியம் பெண்டிங் காலத்தில் இயற்றப்பட்ட பட்டயச் சட்டம் எது? = கி.பி.1833 ஆம் ஆண்டு பட்டயச்சட்டம்

எந்த ஆண்டு பட்டயச் சட்டத்தின்படி கிழக்கிந்திய கம்பெனியின் தனி உரிமையானது ஒழிக்கப்பட்டது? = கி.பி.1833

எந்த ஆண்டு பட்டயச் சட்டத்தின்படி வங்காள தலைமை ஆளுநர் இனி இந்தியாவின் தலைமை ஆளுநர் என அழைக்கப்பட்டார்? = கி.பி.1833

எந்த ஆண்டு பட்டயச் சட்டத்தின்படி சென்னை, பம்பாய் மற்றும் கல்கத்தாவில் கிறித்துவர்களின் நலனுக்காகப் பிஷப்புகள் நியமனம் செய்யப்பட்டனர்? = கி.பி.1833

கி.பி.1833 ஆம் ஆண்டு பட்டயச்சட்டத்தின் விதிகளானது யாருடைய தாராள மற்றும் பயன்பாட்டு தத்துவங்களை உள்ளடிக்கியதாக அமைந்திருந்தது? = பெந்தாம்

ரிப்பன் பிரபு உடன் ஒப்பிடப்படும் இந்திய தலைமை ஆளுநர் யார்? = வில்லியம் பெண்டிங் பிரபு

எந்த இந்திய தலைமை ஆளுநர் இந்தியாவில் ஆங்கில கல்வியை வளர்ச்சி பெறச் செய்து இந்தியர்களின் நலன் மேம்பட பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டார்? = வில்லியம் பெண்டிங் பிரபு

எந்த ஆண்டு முதல் ஆங்கில மொழி ஆட்சி மொழியாகவும் பயிசி மொழியாகவும் மாற்றப்பட்டது? = கி.பி.1835 - மார்ச் 17

யாண்டேயூ உடன்படிக்கையின் படி முதல் பர்மிய போருக்கு பிறகு பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ் கொண்டுவரப்பட்டு வில்லியம் பெண்டிங்கால் நிர்வாகம் செய்யப்பட்ட இரு அரசுகள் யாது? = கச்சார் மற்றும் ஜெயிந்தியா

எந்த ஆண்டின் போது வில்லியம் பெண்டிங் அவர்கள் பஞ்சாப் அரசர் இரஞ்சித் சிங் உடன் சிந்துநதி படகுப் போக்குவரத்து உடன்படிக்கையை செய்து கொண்டார்? = கி.பி.1831

மக்கள் நலனின் அக்கறை செலுத்திய முதல் இந்திய தலைமை ஆளுநர் யார்? = வில்லியம் பெண்டிங் பிரபு

முதன் முதலாக நிர்வாகத்தில் இந்தியர்களுக்கு சதர் அமீன் என்ற உயர்பதவியினை வழங்கிய தலைமை ஆளுநர் யார்? = வில்லியம் பெண்டிங் பிரபு

எந்த ஆண்டின் போது பெண்டிங் பிரபுவும், ராஜா ரஞ்சித் சிங்கும் சிந்துநதி உடன்படிக்கையை செய்து கொண்டனர்? = கி.பி.1831 (இருவரும் முதலில் சந்தித்த இடம் - ரூபர்)

மகல்வாரி முறையை அறிமுகப்படுத்திய இந்திய தலைமை ஆளுநர் யார்? = வில்லியம் பெண்டிங் பிரபு

மகல்வாரி முறை முதன் முதலில் அறிமுகம் செய்யப்பட்ட இடம் எது? = ஆக்ரா

மகல் என்பதன் பொருள் யாது? = கிராமம்

மகல்வாரி முறையானது எந்த இருவருக்கும் இடையே ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டது? = அரசாங்கம் மற்றும் கிராமத்திற்கும் இடையே நடைபெற்றது

## ஆக்லாந்து பிரபு (கி.பி.1836 - கி.பி.1842):

வில்லியம் பெண்டிங் பிரபு பிறகு இந்திய தலைமை கவர்னராக பொறுப்பேற்றவர் யார்? = ஆக்லாந்து பிரபு

முதலாம் ஆப்கன் போரானது எந்த இந்திய தலைமை ஆளுநர் காலத்தில் நடைபெற்றது? = ஆக்லாந்து பிரபு (கி.பி.1836 - கி.பி.1842)

முதலாம் ஆப்கன் போர் நடைபெற்ற ஆண்டு எது? = கி.பி.1839 - கி.பி.1842

ஆக்லாந்து பிரபுவிற்கு பிறகு இந்திய தலைமை ஆளுநராக பதவியேற்றவர் யார்? = எல்லன்பரோ பிரபு (கி.பி.1842 - கி.பி.1844)

சிந்து மாகாணத்தை இந்திய எல்லைப் பகுதியுடன் இணைத்து ஆங்கில தலைமை ஆளுநர் யார்? = எல்லன்பரோ பிரபு

எல்லன்பரோ பிறகு இந்திய தலைமை ஆளுநராக பதவியேற்றவர் யார்? = ஹார்டிஞ்ச் பிரபு (கி.பி.1844 - கி.பி.1848)

கி.பி.1838 ஆம் ஆண்டு முக்கூட்டு உடன்படிக்கையில் கையெதிட்டவர்கள் யார்? = ஆக்லாண்ட் பிரபு, ரஞ்சித் பிரபு மற்றும் ஷாஷீஜா

## முதலாம் ஹார்டிஞ்சு பிரபு (கி.பி.1844 - கி.பி.1848)

'ஆங்கில கல்வியினை கற்ற இந்தியர்களுக்கு அரசாங்க உயர் பதவிகள் வழங்கப்படும்' - என அறிவித்த தலைமை ஆளுநர் யார்? = முதலாம் ஹார்டிஞ்சு பிரபு

ஒரிசாவின் கோண்ட் இன மலைவாழ் மக்களிடம் நிலவிய நரபலியினை தடைசெய்த இந்திய தலைமை ஆளுநர் யார்? = முதலாம் ஹார்டிஞ்சு பிரபு

முதல் ஆங்கில சீக்கிய போர் நடைபெற்ற ஆண்டு எது? = கி.பி.1845 - கி.பி.1846

முதல் ஆங்கில சீக்கிய போரானது எந்த உடன்படிக்கையின் படி முடிவுற்றது? = லாகூர் உடன்படிக்கை

## டல்ஹௌசி பிரபு (கி.பி.1848 - கி.பி.1855):

எந்த ஆண்டின் போது டல்ஹௌசி பிரபு அவர்கள் இந்தியாவின் தலைமை ஆளுநராக பொறுப்பேற்றுக் கொண்டார்? = கி.பி.1848

ஆங்கில ஆதிக்கத்தை பெருக்க மொத்தம் எத்தனை வகை கொள்களை டல்ஹௌசி பிரபு அவர்கள் கடைபிடித்தார்? = 3 வகை (1. வாரிசு இழப்புக் கொள்கை; 2.போர்கள் மூலம் நாடுகளை இணைத்தல்; 3. நல்லாட்சியற்ற நாடுகள் எனக் கூறி சுதேசி அரசுகளை இணைத்தல்)

டல்ஹௌசி பிரபு ஆங்கிலப்பேரரசை விரிவுப்படுத்த கடைப்பிடித்த புதிய கொள்கை எது? = வாரிசு இழப்புக் கொள்கை

டல்ஹௌசி பிரபுவின் எந்த கொள்கையின் படி ஆண் வாரிசு இன்றி இருக்கும் பேரரசானது ஆங்கிலப் பேரரசுடன் இணைக்கப்பட்டது? = வாரிசு இழப்புக் கொள்கை

வாரிசு இழப்புக் கொள்கையின் படி எந்த நிலப்பகுதிகளை டல்ஹௌசி பிரபு அவர்கள் ஆங்கில அரசுடன் இணைத்துக் கொண்டார்? = சதாரா (1848), ஜெய்ப்பூர், சாம்பல்பூர், உதய்பூர், ஜான்சி மற்றும் நாகபுரி (1854)

கி.பி.1857 ஆண்டு நடைபெற்ற பெரும் புரட்சிக்கு முக்கிய காரணமாக கருதப்படுவது எது? = வாரிசு இழப்புக் கொள்கை

## இரண்டாம் ஆங்கில சீக்கியப் போர் (கி.பி.1848 - கி.பி.1849)

சீக்கியர்கள் யார் தலைமையில் ஆங்கிலேயருக்கு எதிராக கிளர்ச்சியில் ஈடுபட்டனர்? = மூல்ராஜ்

டல்ஹௌசி பிரபு சீக்கியர்களுக்கு எதிராக எந்த ஆண்டின் போது போரை அறிவித்தார்? = கி.பி.1848

டல்ஹௌசி பிரபு பஞ்சாபை ஆங்கில அரசுடன் இணைத்த ஆண்டு எது? = கி.பி.1849

சாந்தலர்கள் கிளர்ச்சி ஏற்பட்ட ஆண்டு எது? = கி.பி.1855

இரண்டாம் பர்மியப் போர் நடைபெற்ற ஆண்டு எது? = கி.பி.1852

எந்த போர் முடிவுக்கு பின் பர்மா முழுவதும் ஆங்கிலேயரின் கட்டுப்பாட்டின் கீழ் வந்தது? = இரண்டாம் பர்மிய போர்

இரண்டாம் பர்மிய போர் ஏற்பட முக்கிய காரணம் எது? = பர்மாவில் ஆங்கிலேயர் இழிவாக நடத்தப்பட்டது

கி.பி.1856 ஆம் ஆண்டு டல்ஹௌசி பிரபு அவர்கள் எந்த நகரில் நல்லாட்சி நடைபெறவிலை என்ற காரணத்தின் அடிப்படையில் ஆங்கில பேரரசுடன் இணைத்துக் கொண்டார்? = அயோத்தி

கி.பி.1856 ஆம் ஆண்டு அயோத்தி ஆங்கில பேரரசுடன் இணைக்கும் போது அயோத்தி நவாப்பாக இருந்தவர் யார்? = வாசித் அலி ஷா

நல்லாட்சி நடைபெறவில்லை என்ற காரணத்தின் அடிப்படையில் ஆங்கில பேரரசுடன் இணைக்கப்பட்ட மற்றொரு நகரம் எது? = தஞ்சாவூர்

எந்த தலைமை ஆளுநர் காலத்தில் வங்காள நிர்வாகத்தை கவனிக்க துணை ஆளுநர் ஒருவர் நியமிக்கப்பட்டார்? = டல்ஹௌசி பிரபு

யாருடைய ஆளுநர் காலத்தில் சிம்லா கோடைக்கால தலைநகரமாகவும், கல்கத்தா குளிர்கால தலைநகரமாகவும் செயல்பட்டது? = டல்ஹௌசி பிரபு

சென்னை, பம்பாய் மற்றும் கல்கத்தா ஆகிய மூன்று மாநிலங்களிலும் ஒரே மாதிரியான ஆட்சி முறையை அறிமுகப்படுத்திய தலைமை ஆளுநர் யார்? = டல்ஹௌசி பிரபு

## இந்தியாவில் இருப்புப்பாதை, மின்தந்தி மற்றும் அஞ்சல் துறை:

இந்தியாவில் முதன் முதலில் இருப்புப்பாதையை அறிமுகப்படுத்திய இந்திய தலைமை ஆளுநர் யார்? = டல்ஹௌசி பிரபு

முதல் இருப்பாதையானது எந்த ஆண்டின் போது நிறுவப்பட்டது? எந்த இரு நகரங்களுக்கு இடையே நிறுவப்பட்டது? = கி.பி.1853 - பம்பாய் முதல் தானா வரை (36 கி.மீ/ 20 மைல்)

ஹௌரா முதல் இராணிகஞ்ச் இடையிலான இருப்புப்பாதையானது எந்த ஆண்டின் போது நிறுவப்பட்டது? = கி.பி.1854

சென்னை முதல் அரக்கோணம் வரையிலான இருப்புப்பாதையானது எந்த ஆண்டின் போது அமைக்கப்பட்டது? = கி.பி.1856

இருப்புப்பாதையின் தந்தை என அழைக்கப்பட்டவர் யார்? = டல்ஹௌசி பிரபு

யாருடைய தலைமை ஆளுநர் காலத்தில் நாடு முழுவதும் தபால் மற்றும் தந்தி அலுவலகங்கள் நிறுவப்பட்டன? = டல்ஹௌசி பிரபு

எந்த தலைமை ஆளுநர் காலத்தில் நாடு முழுவதும் ஒரே மாதிரியான கடித கட்டணமானது நிர்ணயிக்கப்பட்டது? = டல்ஹௌசி பிரபு

எந்த ஆண்டின் போது புதிய அஞ்சலக சட்டமானது நிறைவேற்றப்பட்டது? = கி.பி.1854

முதன் முதலில் அஞ்சல் விலையானது எந்த நாட்டில் அறிமுகப்படுத்தப்பட்டது? = இந்தியா

டல்ஹௌசி பிரபுவால் அறிமுகம் செய்யப்பட்ட அஞ்சல் விலையின் மதிப்பு யாது? = அரையணா (3 பைசா)

எந்த தலைமை கவர்னர் காலத்தில் நாடு முழுவதும் தந்திக் கம்பிகள் மூலம் இணைக்கப்பட்டிருந்தன? = டல்ஹௌசி பிரபு

கி.பி.1852 ஆம் ஆண்டு டல்ஹௌசி பிரபுவால் தந்தித் துறையின் முக்கிய கண்காணிப்பளராக நியமிக்கப்பட்டவர் யார்? = ஓ ஷாகன்னசே

தந்தி மூலம் இணைக்கப்பட்ட முக்கிய நகரங்கள் யாது? = கல்கத்தா, பெஷாகார், பம்பாய், சென்னை

கி.பி.1852 ஆம் ஆண்டு எந்த இரு இடங்களுக்கு இடையே முதன் முதலாக மின்சார தந்தி போடப்பட்டது? = கொல்கத்தா - ஆக்ரா

போக்குவரத்து மற்றும் தகவல் தொடர்பானது யாருடைய காலத்தில் அதிக முக்கியத்துவம் பெற்று இருந்தன? = டல்ஹௌசி பிரபு

டல்ஹௌசி பிரபு அறிமுகப்படுத்திய வாணிபம் எது? = தடையில்லா வாணிபம்

விதவைகள் மறுமண சட்டத்தை கொண்டுவர மூலக்காரணமாக இருந்தவர் யார்? = டல்ஹௌசி பிரபு

எந்த ஆண்டின் போது டல்ஹௌசி பிரபு அவர்கள் விதவைகள் மறுமண சட்டத்தை கொண்டு வந்தார்? = கி.பி.1856

ஒருவர் மதம் மாறினாலும் அவர்களின் மூதாதையர்களின் சொத்தில் பங்கு உண்டு என்று கூறிய இந்திய தலைமை ஆளுநர் யார்? = டல்ஹௌசி பிரபு

பொதுப்பணித்துறையை தனித்துறையாக பிரித்த தலைமை ஆளுநர் யார்? = டல்ஹௌசி பிரபு

இந்தியாவின் பொறியியல் பணித்துறைக்கு அடித்தளம் அமைத்துக் கொடுத்த தலைமை ஆளுநர் யார்? = டல்ஹௌசி பிரபு

சீரமைக்கப்படாத அமைப்பு (Non - Regulation System) என்ற திட்டத்தை அறிமுகம் செய்த ஆளுநர் யார்? = டல்ஹௌசி பிரபு

யாருடைய தலைமை ஆளுநர் காலத்தில் பெஷாவர் மற்றும் கல்கத்தா பெருவழிச்சாலையானது புதுப்பிக்கப்பட்டது? = டல்ஹௌசி பிரபு

கங்கை கால்வாயானது எந்த ஆளுநர் காலத்தில் வெட்டப்பட்டது? = டல்ஹௌசி பிரபு

## சர் சார்லஸ் உட்ஸ் கல்வி கொள்கை

டல்ஹௌசி பிரபு காலத்தில் கி.பி.1854 ஆம் ஆண்டு யாருடைய தலைமையில் கல்விக்குழுவானது அமைக்கப்பட்டது? = சர் சார்லஸ் உட்ஸ்

'இந்தியாவின் அறிவுப்பட்டயம்' என அழைக்கப்படும் கல்வி அறிக்கை எது? = கி.பி.1854 ஆம் ஆண்டு கல்வி அறிக்கை

இந்தியாவின் ஆங்கில கல்வி மகாசாசனம் என அழைக்கப்படுவது யாது? = சர் சார்லஸ் உட்ஸ் கொள்கை

எந்த தலைமை ஆளுநர் காலத்தின் போது ஆசிரியர் பயிற்சி பள்ளிகள் நாடு முழுவதும் தோற்கடிக்கப்பட்டு ஆசியர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது? = டல்ஹௌசி பிரபு

எந்த பல்கலைக்கழகத்தை அடிப்படையாக கொண்டு சென்னை, பம்பாய், கல்கத்தா பல்கலைக்கழகங்கள் நிறுவப்பட்டன? = இலண்டன் பல்கலைக்கழகம்

ஆங்கிலேயர்கள் இந்தியாவில் முதல் பல்கலைக்கழகத்தை ஏற்படுத்திய இடம் எது? = கல்கத்தா

டல்ஹௌசி பிரபு அவர்கள் எந்த இடத்தில் பொறியியல் கல்லூரி ஒன்றை தோற்றுவித்தார்? = ரூர்கி

எந்த தலைமை ஆளுநர் காலத்தில் அங்கீகரிக்கப்பட்ட பள்ளி மற்றும் கல்லூரிகளுக்கு அரசால் நிதி உதவி வழங்கும் முறையானது அறிமுகம் செய்யப்பட்டது? = டல்ஹௌசி பிரபு

இந்திய இராணுவத்தில் கூர்க்கர்களை அதிகம் சேர்த்துக் கொண்ட தலைமை ஆளுநர் யார்? = டல்ஹௌசி பிரபு

இராணுவத்தின் தலைமையகத்தை கல்கத்தாவிலிருந்து சிம்லாவுக்கு மாற்றிய தலைமை ஆளுநர் யார்? = டல்ஹௌசி பிரபு

பீரங்கி படையின் தலைமையகத்தை கல்கத்தாவிலிருந்து மீரட்டிற்கு மாற்றிய இந்திய தலைமை ஆளுநர் யார்? = டல்ஹௌசி பிரபு

இந்திய தலைமை ஆளுநர்களில் மிக இளவயது தலைமை ஆளுநர் யார்? = டல்ஹௌசி பிரபு (36 வயது)

'புதிய இந்தியாவை உருவாக்கியவர்' என்ற சிறப்பு பெயரை பெற்ற இந்திய தலைமை ஆளுநர் யார்? = டல்ஹௌசி பிரபு

வங்காளத்திற்கு ஒரு துணை ஆளுநர் நியமிக்க வழிவகுத்த சட்டம் எது? = கி.பி.1853 ஆண்டு பட்டயச் சட்டம்

இந்திய ஆட்சிப் பணிக்கு போட்டித் தேர்வை அறிமுகம் செய்த சட்டம் எது? = கி.பி.1853 ஆண்டு பட்டயச் சட்டம்

வங்காள பொறுப்பு அல்லாத முதல் கவர்னர் ஜெனரல் யார்? = டல்ஹௌசி பிரபு

## கானிங் பிரபு (கி.பி.1856 - கி.பி.1858)

டல்ஹௌசி பிரபு பிறகு இந்திய தலைமை ஆளுநராக பதவியேற்றவர் யார்? = கானிங் பிரபு

கி.பி.1857 ஆம் ஆண்டு நடைபெற்ற பெரும்புரட்சியின் போது இந்தியாவின் தலைமை ஆளுநராக இருந்தவர் யார்? = கானிங் பிரபு

விக்டோரியா மகாராணி பேரறிக்கையை வாசித்த தலைமை ஆளுநர் யார்? = கானிங் பிரபு

எந்த ஆண்டின் போது கானிங் பிரபு அவர்கள் பொது இராணுவப் பணியாளர் சட்டத்தை (The General Service Enlistment Act) கொண்டு வந்தார்? = கி.பி.1856

## மாபெரும் புரட்சி (கி.பி.1857)

ஆங்கில ஏகாபத்தியத்திற்கு ஒரு மாபெரும் சோதனை ஏற்பட்ட ஆண்டு எது? = கி.பி.1857

கி.பி.1857 ஆம் ஆண்டு தோன்றிய புரட்சியானது முதலில் எந்த வீரர்களிடம் தோன்றியது? = இராணுவ வீரர்கள்

கி.பி.1857 ஆம் ஆண்டு நடைபெற்ற பெரும்புரட்சியின் போது இந்தியாவின் தலைமை ஆளுநராக இருந்தவர் யார்? = கானிங் பிரபு

ஆங்கில வரலாற்று அறிஞர்கள் கி.பி.1857 ஆம் ஆண்டு நடைபெற்ற பெரும்புரட்சியை எவ்வாறு அழைத்தனர்? = படைவீரர்கள் கிளர்ச்சி

இராணுவ வீரர்களின் தன்னலத்தை அடிப்படையாக கொண்டு தோன்றிய புரட்சி எது? = கி.பி.1857 பெரும் புரட்சி

இந்திய வரலாற்று அறிஞர்கள் கி.பி.1857 ஆம் ஆண்டு நடைபெற்ற பெரும்புரட்சியை எவ்வாறு அழைத்தனர்? = முதல் இந்திய சுதந்திரப் போர்

1857 ஆம் ஆண்டு புரட்சிக்கு உடனடிக் காராணம் யாது? = புதிய என்பீல்டு வகைத் துப்பாக்கி அறிமுகப்படுத்தப்பட்ட கொழுப்பு தடவிய தோட்டாக்கள்

புதிய என்பீல்டு வகைத் துப்பாக்கி அறிமுகப்படுத்தப்பட்ட தோட்டாக்களில் எந்த இரு விலங்குகளின் கொழுப்பானது தடவப்பட்டிருப்பதாக வதந்தி பரவியது? = பசு மற்றும் பன்றி

முதன் முதலில் கொழுப்புத்தடவிய தோட்டாக்களை தொடமறுத்து எதிர்ப்பு தெரிவித்த வீரர் யார்? = மங்கள் பாண்டே

மங்கள் பாண்டே அவர்கள் எந்த காலாட்படையை சேர்ந்தவர்? = வங்காளத்தில் உள்ள பராக்பூர் என்ற இடத்தில் இருந்த 34 வது காலாட்படை பிரிவை சேர்ந்தவர்

மங்கள் பாண்டே அவர்கள் தூங்கிலிடப்பட்ட ஆண்டு எது? = கி.பி.1957 - ஏப்ரல் 8

கி.பி.1857 - மே 9 அன்று முதல் புரட்சியானது தொடங்கிய இடம் எது? = மீரட்

கி.பி.1857 ஆம் ஆண்டு வெளிப்படையாக புரட்சி வெடித்த நாள் எது? = மே 10

மீரட்டில் வெளிப்படையான புரட்சி வெடிக்கும் போது பதவியில் இருந்த இராணுவ தளபதி யார்? = ஹீவட்

கி.பி.1857 ஆம் ஆண்டு நடைபெற்ற மாபெரும் புரட்சியை முதல் இந்திய விடுதலை போர் எனக் கூறியவர் யார்? = வீர சவார்க்கர்

கி.பி.1857 ஆம் ஆண்டு நடைபெற்ற மாபெரும் புரட்சியை கொழுப்பு தடவப்பட்ட துப்பாக்கி ரவைகள் வைக்கப்பட்டுள்ள காட்ரிட்ஜ் எனக் கூறிய அறிஞர் யார்? = சர் ஜான் லாரன்ஸ்

கி.பி.1857 ஆம் ஆண்டு நடைபெற்ற மாபெரும் புரட்சியை தன்னலமுள்ள படைவீரர்கள் நாட்டுப்பற்றின்றி மேற்கொண்ட செய்கை எனக் கூறிய அறிஞர் யார்? = அவுட்ராம்

.பி.1857 ஆம் ஆண்டு நடைபெற்ற பெரும்புரட்சியை 'வெறும் ராணுவப் புரட்சி' என்று கூறிய அறிஞர் யார்? = சர் ஜான் லாரன்ஸ்

.பி.1857 ஆம் ஆண்டு நடைபெற்ற பெரும்புரட்சியை 'வெறும் ராணுவப் புரட்சி' என்று கூறிய அறிஞர் யார்? = சர் ஜான் லாரன்ஸ்

.பி.1857 ஆம் ஆண்டு கலகம் இந்திய விடுதலை இயக்கத்தின் ஒரு பகுதி என்று கூறியவர் யார்? = எஸ்.என்.சென்

.பி.1857 ஆம் ஆண்டுக்கு முன்பு தோன்றிய சிவில் அல்லது ராணுவ கிளர்ச்சிகள் அனைத்தும் ஆங்காங்கே நடைபெற்றவை என்றும், பின்னர் அதுவே .பி.1857 ஆம் ஆண்டு பெரும் கலகமாக உச்சவடிவம் பெற்றது என்று கூறியவர் யார்? = ஆர்.சி.மஜீம்தார்

பழம் பெருமை கொண்ட ஒரு நாட்டை எங்கிருந்தோ ஒரு தீவிலிருந்து வந்த சிறு கூட்டம் ஆட்சி செய்கின்றது என்று கூறியவர் யார்? = ஜவஹர்லால் நேரு - டிஸ்கவரி ஆஃப் இந்தியா என்ற நூலில் இவ்வாறு குறிப்பிட்டு இருக்கிறார்

கி.பி.1857 ஆம் ஆண்டு  எந்த இடத்தில் இந்திய சிப்பாய்கள் ஒன்று கூடி கொழுப்பு தடவப்பட்ட தோட்டாக்கள் பற்றி பேசினர்? = கல்கத்தா டம்டம் நகர்

மங்கள் பாண்டே அவர்களால் சுட்டுக் கொல்லப்பட்ட ஆங்கில படைத்தளபதி யார்? = லெப்டினட் பர்க்

## டெல்லி புரட்சி:

டெல்லியில் கலகம் ஏற்பட்ட போது பதவியில் இருந்த இராணுவ தளபதி யார்? = லெப்டிண்ன்ட் வில்டாஷ்பி

புரட்சியாளர்கள் டெல்லியை கைப்பற்றிய பிறகு யாரை டெல்லியின் மன்னராக பிரகடனப்படுத்தி அரியணையில் அமர்த்தினர்? = இரண்டாம் பகதூர்ஷா

டெல்லி புரட்சிக்கு தலைமையேற்று நடத்தியவர் யார்? = இரண்டாம் பகதூர்ஷா

உண்மையில் டெல்லி புரட்சிக்கு தலைமை தாங்கி நடத்தியவர் யார்? = பகத்கான்

யார் தலைமையிலான ஆங்கில படையானது நான்கு மாத முற்றுகைக்குப் பிறகு 1857 செப்டம்பரில் டெல்லியை மீண்டும் கைப்பற்றியது? = சர் ஜான் நிக்கல்சன்

இரண்டாம் பகதூர்ஷா அவர்கள் குற்றவாளியாக அறிவிக்கப்பட்டு ஆயுள் கைதியாக எங்கு அனுப்பி வைக்கப்பட்டார்? = இரங்கூன்

இரண்டாம் பகதூர்ஷா அவர்கள் எந்த ஆண்டின் போது இரங்கூனில் இறந்தார்? = கி.பி.1862

யாருடைய மரணத்துக்கு பிறகு மாபெரும் முகாலய பேரரசானது முடிவுக்கு வந்தது? = இரண்டாம் பகதூர்ஷா

## கான்பூர் புரட்சி:

கான்பூர் புரட்சிக்கு தலைமையேற்று நடத்தியவர் யார்? = இரண்டாம் பாஜிராவின் வளர்ப்பு மகன் நானா சாகிப்

நானா சாகிப் அவர்கள் யார் உதவியுடன் கான்பூர் கோட்டையைக் கைப்பற்றி தன்னை பீஷ்வாக அறிவித்துக் கொண்டார்? = படைத்தளபதி தாந்தியா தோப்

நானா சாகிப் அவர்களின் ஆலோசகர் யார்? = சுசி முல்லாகான்

யார் தலைமையிலான ஆங்கில படையானது கான்பூரில் நுழைந்து புரட்சியாளர்களை தோற்கடித்தது? = கர்னல் ஹாவ்லாக் மற்றும் கர்னல் ஒநெயில்

எந்த ஆங்கில படைத்தளபதி நானா சாகிப்பை தோற்கடித்து கான்பூரை ஜீலை 17, 1857 இல் மீண்டும் கைப்பற்றினார்? = ஹாவ்லாக்

பெரும் புரட்சியில் தோற்ற நானா சாகிப் அவர்கள் அங்கிருந்து தப்பி எந்த நாட்டிற்கு சென்று சிறிது காலம் கழித்து மரணமடைந்தார்? = நேபாளம்

## லக்னோ புரட்சி:

லக்னோ புரட்சிக்கு தலைமையேற்று நடத்தியவர் யார்? = அயோத்தி நவாப், வாஜித் அலியின் மனைவி பேகம் ஹசரத்மஹால்

பேகம் ஹசரத்மகால் அவர்கள் யாரை அயோத்தி நவாப்பாக அறிவித்தார்? = அவர் மகன் பிர்ஜிஸ் காதர்

லக்னோ புரட்சியின் போது கொல்லப்பட்ட ஆங்கில படைத்தளபதி யார்? = சர்.ஹென்றி லாரன்ஸ்

எந்த ஆங்கில படைத்தளபதியால் லக்னோவில் புரட்சியாளர்கள் ஒடுக்கப்பட்டு கி.பி.1858 ஆம் ஆண்டு மீண்டும் ஆங்கிலேயர்களால் கைப்பற்றப்பட்டது? = ஆட்ராம் மற்றும் ஹாவ்லாக்

எந்த இங்கிலாந்து தளபதி வந்த பிறகு லக்னோவில் பெரும் புரட்சியானது அடக்கப்பட்டது? = சர் காலின் கேம்பல்

## மத்திய இந்தியா புரட்சி:

மத்திய இந்தியா புரட்சிக்கு தலைமையேற்று நடத்தியவர் யார்? = தாந்தியா தோப் அற்றும் ஜான்சிராணி லட்சுமிபாய்

ஜான்சிக்கோட்டையை முற்றுகையிட்ட ஆங்கில படைத்தளபதி யார்? = சர் ஹக்ரேஸ்

ஜான்சிகோட்டை கோட்டையை கைப்பற்ற ஏற்பட்ட போரில் தோல்வியடைந்த ஜான்சிராணி எந்த இடத்திற்கு தப்பிச் சென்றார்? = கல்பி

தாந்தியதோப் மற்றும் ஜான்சிராணி இருவரும் ஒன்று சேர்ந்து எந்த கோட்டையை ஆங்கிலேயரிடமிருந்து கைப்பற்றினர்? = குவாலியர் கோட்டை

எந்த இருவர் மரணத்திற்கு பிறகு மத்திய இந்தியாவில் கி.பி.1857 ஆம் ஆண்டு பெரும் புரட்சியானது முடிவுக்கு வந்தது? = தாந்தியாதோப் மற்றும் ஜான்சிராணி

கி.பி.1857 ஆம் ஆண்டு நடைபெற்ற பெரும்புரட்சியில் திறமையான தளபதியாக இருந்த ஆங்கில படைத்தளபதி யார்? = சர் ஜான் லாரன்ஸ், ஹேவ்லுக் மற்றும் நிகோல்சன்

## விக்டோரியா மகாராணி பேரறிக்கை (கி.பி.1858)

கி.பி.1857 ஆம் ஆண்டு சிப்பாய் புரட்சியானது இந்தியாவில் எந்த ஆட்சியை முடிவுக்கு கொண்டு வந்தது? = ஆங்கில கிழக்கிந்திய கம்பெனி

கி.பி.1857 ஆம் ஆண்டு பெரும்புரட்சிக்கு பிறகு இந்தியாவின் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்டவர் யார்? = இங்கிலாந்து அரசி

விக்டோரியாவின் பேரறிக்கை வெளியிடப்பட்ட ஆண்டு எது? = நவம்பர் 01 - கி.பி.1858

விக்டோரியா மகாராணி பேரறிக்கையானது எந்த நகரில் வெளியிடப்பட்டது? = அலகாபாத்

இந்திய மக்களின் மேக்னா கார்ட்டா (உரிமை சாசனம்) என அழைக்கப்படுவது? = விக்டோரியா மகாராணி பேரறிக்கை

விக்டோரியா பேரறிக்கையின் மூலம் கலைக்கப்பட்ட இரு குழுக்கள் எது? = கட்டுப்பாட்டுக் குழு மற்றும் நிர்வாகக் குழு

விக்டோரியா பேரறிக்கையின் மூலம் உருவாக்கப்பட்ட சபை எது? = இந்திய செயலர் இந்திய கவுன்சில் சபை

இந்திய தலைமை ஆளுநர் விக்டோரியா பேரறிக்கைக்கு பிறகு எவ்வாறு அழைக்கப்பட்டனர்? = இந்திய அரசப் பிரதிநிதி

விக்டோரியா பேரறிக்கையின் மூலம் ஆங்கிலேயர்களால் கைவிடப்பட்ட கொள்கை எது? = நாடுபிடிக்கும் கொள்கை (கி.பி.1859) (லாப்ஸ் கொள்கை)

எந்த அறிக்கை மூலம் இந்தியர்களின் முழு சமய சுதந்திரமானது அங்கீகரிக்கப்பட்டது? = விக்டோரியா பேரறிக்கையின்

எந்த அறிக்கை வெளியிட்ட பிறகு இந்திய அரசர்களுக்கு ஆங்கிலேயர்கள் 'இனி எந்த ஒரு பகுதியும் இணைத்துக் கொள்ள மாட்டார்கள்' என்ற உறுதி மொழி வழங்கப்பட்டது? = விக்டோரியா பேரறிக்கையின்

இந்தியாவின் கடைசி தலைமை ஆளுநரும், முதல் அரசுப்பிரதிநிதியுமாக பதவி வகித்தவர் யார்? = கானிங் பிரபு

எந்த ஆண்டின் போது கானிங் பிரபு இந்திய கவுன்சில் சட்டத்தினை வெளியிட்டார்? = கி.பி.1861

எந்த பேரறிக்கையின் சட்டத்தின்படி இந்தியச்செயலாளர் பதவியும் அவருக்கு உதவி செய்ய 15 பேர் கொண்ட குழு ஒன்றும் அமைக்கப்பட்டது? = விக்டோரியா பேரறிக்கையின்

விக்டோரியா பேரறிக்கையின் படி எந்த குற்றங்களில் ஈடுபட்டவர்களை தவிர மற்ற அனைவருக்கும் பொது மன்னிப்பு வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டது? = கொலை குற்றம்

விக்டோரியா மகாராணி பேரறிக்கையின் படி இந்தியாவின் முதல் அரசு செயலராக நியமிக்கப்பட்டவர் யார்? = எட்வர்டு ஹென்றி ஸ்டேன்லி

இந்தியா சுதந்திரம் அடைந்த போது இந்திய அரசு செயலாளராக இருந்தவர் யார்? = வில்லியம் பிரான்சிஸ் ஹேர்

கி.பி.1857 என்ற நூலை எழுதியவர் யார்? = எஸ்.என்.சென்

## இந்திய தேசிய இயக்கம் (கி.பி.1885 - கி.பி 1905):

இந்திய தேசிய காங்கிரசை தோற்றுவித்தவர் யார்? = ஆலன் ஆக்டேவியன் ஹியூம்

இந்திய தேசிய காங்கிரஸ் இயக்கத்தை தோற்றுவிப்பதற்கு முன் ஆலன் ஆக்டேவியன் ஹியூம் அவர்கள் வகித்த பதவி யாது? = ஐ.சி.எஸ் (ICS)

இந்திய தேசிய காங்கிரசின் முதல் கூட்டமானது எப்பொழுது எங்கு நடைபெற்றது? = கி.பி.1886 - பம்பாய்

இந்திய காங்கிரஸின் முதல் கூட்டமானது முதலில் எந்நகரில் நடப்பதாக அறிவிக்கப்பட்டு இருந்தது? = புனே (பிளேக் நோய் அறிகுறியால் பம்பாய்க்கு மாற்றப்பட்டது)

இந்திய காங்கிரசின் முதல் கூட்டத்திற்கு தலைமை வகித்தவர் யார்? = டபிள்யூ.சி.பானர்ஜி

காங்கிரசின் முதல் கூட்டத்தில் கலந்து கொண்ட பிரதிநிகள் மொத்தம் எத்தனை பேர்? = 72 பேர்

இந்திய தேசிய காங்கிரசின் இரண்டாவது கூட்டம் நடைபெற்ற ஆண்டு? = கி.பி.1886 - கல்கத்தா

இரண்டாம் இந்திய தேசிய காங்கிரஸ் கூட்டத்திற்கு தலைமை வகித்தவர் யார்? = தாதாபாய் நௌராஜி

இந்திய தேசிய காங்கிரசின் மூன்றாவது கூட்டம் நடைபெற்ற ஆண்டு? = கி.பி.1887 - சென்னை

எந்த காங்கிரஸ் கூட்டத்தின் போது இந்திய தேசிய யூனியன் என்ற பெயரானது இந்திய தேசிய காங்கிரஸ் என்ற பெயராக மாற்றப்பட்டது? = இரண்டாம் காங்கிரஸ் மாநாடு

இந்திய தேசிய பூனியன் என்ற பெயரை இந்திய தேசிய காங்கிரஸ் என்று பெயர் மாற்றியவர் யார்? = தாதாபாய் நௌராஜி

'காங்கிரசின் தோற்றம் ஒரு மர்மமாகவே உள்ளது' - என்று கூறியவர் யார்? = பட்டாபி சித்தாராமையா

இந்திய தேசிய காங்கிரசின் தோற்றத்தை The Safety Wall Theory என்று கூறிவர் யார்? = W.C.பானர்ஜி

'ஆங்கிலேயர்கள் தமது ஆட்சியை பாதுகாத்து கொள்வதற்காக ஏ.ஓ.ஹியூமின் உதவியுடன் காங்கிரசை உருவாக்கினர்' - என்று கூறியவர் யார்? = W.C.பானர்ஜி

கி.பி.1886 ஆம் ஆண்டு கல்கத்தாவில் நடைபெற்ற இந்திய தேசிய காங்கிரஸ் மாநாட்டில் தேநீர் விருந்து அளித்த இந்திய தலைமை ஆளுநர் யார்? = டஃப்ரின் பிரபு

இந்திய தேசிய காங்கிரசின் தலைவராக எந்த ஆண்டில் மகாத்மா காந்தி பதவி வகித்து இருந்தார்? = பெல்காம் - கி.பி.1924

சுபாஷ் சந்திர போஷ் அவர்கள் இந்திய தேசிய காங்கிரஸ் கூட்டத்திற்கு பதவி வகித்த ஆண்டு எது? = கி.பி.1938 - ஹறிபுரா

இந்திய தேசிய காங்கிரசின் முதல் பெண் தலைவர் யார்? = அன்னிபெசண்ட் - கி.பி.1917 - 1918

இந்திய தேசிய காங்கிரசில் தலைவர் பதவி வகித்த முதல் ஆங்கிலேயர் யார்? = ஜார்ஜ் யூல் (கி.பி.1888)

இந்திய தேசிய காங்கிரசில் தலைவர் பதவி வகித்த முதல் முஸ்லீம் யார்? = பக்ருதீன் தயாப்ஜி (கி.பி.1887) - சென்னை

இந்திய சுதந்திரம் அடைந்த போது இந்திய தேசிய காங்கிரசின் தலைவராக இருந்தவர் யார்? = ஆச்சார்யா ஜே.பி.கிருபாளினி (கி.பி.1947 - 1948)

காங்கிரஸ் இயக்கத்தை 'ராஜ துரோக இயக்கம்' என வர்ணித்தவர் இந்திய தலைமை ஆளுநர் யார்? = டஃப்ரின் பிரபு

எந்த ஆண்டு நடைபெற்ற இந்திய தேசிய காங்கிரஸ் மாநாட்டின் போது காந்திஜி அறிமுகமானார்? = கி.பி.1913 - கராச்சி மாநாடு

வங்காள பிரிவினையை எதிக்க காங்கிரசால் தொடங்கப்பட்ட இயக்கம் எது? = சுதேசி இயக்கம்

சுதேசி இயக்கத்தை தொடங்கியவர் யார்? = திலகர்

தாதாபாய் நௌராஜி அவர்கள் எந்தெந்த ஆண்டுகளில் இந்திய தேசிய காங்கிரஸ் மாநாட்டின் தலைவராக பதவி வகித்துள்ளார்? = 1886, 1893 மற்றும் 1906

## மிதவாத தேசியம் (கி.பி.1885 - கி.பி.1905):

காங்கிரஷார் பிரட்டிஷாருக்கு விசுவாசமாக காணப்பட்ட காலம் எது? = மிதவாத தேசியம்

மிதவாத தேசிய காங்கிரசை வழிநடத்தி சென்ற தலைவர்கள் யார்? = ஏ.ஓ.ஹியூம்; டபிள்யூசி.பானர்ஜி; சுரேந்திரநாத் பானர்ஜி; தாதாபாய் நௌராஜி; பெரோஸ் ஹா மேத்தா; கோபால கிருஷ்ண கோகலே; பண்டிட் மதன்மோகன் மாளவியா; பக்ருதின் தியாப்ஜி; நீதிபதி ரானடே; ஜி.சுப்ரமணிய அய்யர்

மிதவாதிகளின் குறிக்கோள் யாது? = அரசியல் உரிமைகளையும் தன்னாட்சியும் படிப்படியாக அடைவது

### சுரேந்திரனாத் பானர்ஜி:

'இந்தியாவின் பர்க்' என அழைக்கப்படுபவர் யார்? = சுரேந்திரநாத் பானர்ஜி

வங்கப்பிரிவினையை மிகக்கடுமையாக எதிர்த்த மிதவாத காங்கிரஸ் தலைவர் யார்? = சுரேந்திரநாத் பானர்ஜி

எந்த ஆண்டின் போது சுரேந்திரநாத் பானர்ஜி இந்திய கழகம் ஒன்றை தோற்றுவித்தார்? = கி.பி.1876

அரசியல் சீர்திருத்தங்கள் கோரி போராட்டம் செய்வதற்காக சுரேந்திர பானர்ஜியால் தொடங்கப்பட்ட கழகம் எது? = இந்திய கழகம்

இந்திய தேசிய பேரவையை (கி.பி.1883) தோற்றுவித்தவர் யார்? = சுரேந்திரநாத் பானர்ஜி

எந்த ஆண்டின் போது இந்திய தேசிய பேரவையானது இந்திய தேசிய காங்கிரசுடன் இணைக்கப்பட்டது? = கி.பி.1886

ஐ.சி.எஸ் (ICS) பதவிக்கு தகுதி பெற்ற முதல் இந்தியர் யார்? = சுரேந்திரனாத் பானர்ஜி

விடுதலையின் வெற்றி ஒரு நாளில் கிடைக்கக் கூடியதன்று - என்று கூறியவர் யார்? = சுரேந்திரனாத் பானர்ஜி

### ஜி.சுப்ரமணிய ஐயர்:

சென்னை மகாஜன சபை தோற்றுவித்து அதன் மூலம் தேசியத்தை பரப்பியவர் யார்? = ஜி.சுப்ரமணிய ஐயர்

ஜி.சுப்ரமணிய ஐயர் அவர்களால் தொடங்கப்பட்ட இரு பத்திரிகைகள் எது? = தி இந்து மற்றும் சுதேச மித்ரன்

### தாதாபாய் நௌராஜி (கி.பி.1825 - கி.பி.1917):

இந்தியாவின் முதுபெரும் மனிதர் என்று அழைக்கப்பட்டவர் யார்? = தாதாபாய் நௌராஜி

இந்தியாவிற்கான அதிகாரபூர்வமற்ற தூதராக இங்கிலாந்தில் கருதப்பட்டவர் யார்? = தாதாபாய் நௌராஜி

பிரிட்டிஷ் நாடாளுமன்றத்தின் பொதுமக்கள் அவையில் உறுப்பினரான முதல் இந்தியர் யார்? = தாதாபாய் நௌராஜி

கி.பி.1886 ஆண்டு கிழக்கு இந்திய கழகத்தை (East Indian Association) தோற்றுவித்தவர் யார்? = தாதாபாய் நௌராஜி

இலண்டனில் இந்திய சங்கத்தினை தோற்றுவித்தவர் யார்? = தாதாபாய் நௌராஜி

இந்தியாவின் குரல் என்ற பத்திரிக்கையை தொடங்கியவர் யார்? = தாதாபாய் நௌராஜி

இந்திய தேசிய காங்கிரசின் மாநாட்டின் தலைவராக தாதாபாய் நௌராஜி அவர்கள் மொத்தம் எத்தனை முறை இருந்திருக்கிறார்? = 3 முறை (1886, 1893 & 1906)

எந்த ஆண்டின் போது வடிகால் கொள்கையை தாதாபாய் நௌராஜி அவர்களால் வெளியிடப்பட்டது? = கி.பி.1867

பிரிட்டிஸ் ஆட்சியில் இந்தியாவின் வறுமை (Poverty Un British Rule in India) - என்ற நூலை எழுதியவர் யார்? = தாதாபாய் நௌராஜி

இவர் தலைமையில் நடைபெற்ற எந்த காங்கிரஸ் மாநாட்டின் போது சுயராஜ்ஜியம் என்ற வார்த்தை முதன் முதலாக பயன்படுத்தப்பட்டது? = கி.பி.1906

## கோபால கிருஷ்ண கோகலே (கி.பி.1886 - கி.பி.1915):

காந்தியின் குருவாக கருதப்படுபவர் யார்? = கோபால கிருஷ்ண கோகலே

இந்திய பணியாளர் கழகத்தை (கி.பி.1905) தோற்றுவித்தவர் யார்? = கோகலே

கி.பி.1911 ஆம் ஆண்டு கட்டாய துவக்கக் கல்வி பற்றிய மசோதாவை சட்டமன்றத்தில் கொண்டு வந்தவர் யார்? = கோகலே

எந்த ஆண்டு நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டின் போது கோகலே அந்த மாநாட்டின் தலைவராக இருந்தார்? = கி.பி.1905 (21 வது காங்கிரஸ் மாநாடு)

'காந்திஜியின் அரசியல் குரு பிரதிநிதித்துவம் இல்லையேல் வரி விதிப்பதில்லை' - என முழங்கியவர் யார்? = திலகர்

'இந்தியாவின் வைரம்', 'மாகாரஷ்டிரத்தின் அணிகலன்', 'உழைப்பாளிகளின் இளவரசர்', கோகலேவை பின்பற்ற செய்யுங்கள் - என்று கோகலேவை போற்றியவர் யார்? = திலகர்

கி.பி.1905 ஆம் ஆண்டு எந்த நகரில் இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் கூட்டமானது கூட்டப்பட்டது? = காசி

மிதவாதிகளின் கோரிக்கைகள் சிலவற்றைக் கூறுக? = சட்டசபை விரிவாக்குதல்; ICS தேர்வுகள் ஒரே சமயத்தில் இந்தியா மற்றும் இங்கிலாந்தில் நடத்த வேண்டும்; உப்பு வரி, சர்க்கரை வரி ஒழித்தல்; ராணுவ செலவுகளை குறைத்தல்; பேச்சுரிமை, எழுத்துரிமை மற்றும் சங்கங்கள் அமைக்கும் உரிமை கோருதல்

மிதவாதிகளின் முக்கிய குறிக்கோள் யாது? = அரசியல் உரிமைகளையும் தன்னாட்சியையும் படிப்படியாக அடைவது

கி.பி.1886 ஆம் ஆண்டு கல்கத்தா காங்கிரஸ் மாநாட்டின் போது உறுப்பினர்களுக்கு தேநீர் விருந்து அளித்த தலைமை ஆளுநர் யார்? = டப்ரின் பிரபு

மிதவாத காங்கிரஸ் மூலம் பிரிட்டிஷாரால் நிறைவேற்றப்பட்ட ஒரே ஒரு கோரிக்கை எது? = கி.பி.1892 ஆம் ஆண்டின் இந்திய கவுன்சில் சட்டம்

## தீவிரவாதிகள் காலம் (கி.பி.1905 - கி.பி.1916)

திவீரவாத காங்கிரசை முன்னிருந்து நடத்திய தலைவர்கள் யார்? = திலகர்; லாலாலஜபதிராய்; பிபின் சந்திரபால்; அரவிந்த் கோஷ்

கல்கத்தா மாநகராட்சி சட்டம் கொண்டுவரப்பட்ட ஆண்டு எது? = கி.பி.1899

தீவிரவாதிகளின் தலையாய குறிக்கோள் எது? = சுயராஜ்யம்

### திலகர்:

இந்தியாவில் பிரிட்டிஷாருக்கு எதிரான ஒரு முழுமையான இயக்கத்தை தோற்றுவித்தவர்? = பால கங்காதர திலகர்

'லோக மான்ய திலகர்' - என அழைக்கப்படுபவர் யார்? = திலகர்

திலகர் அவர்கள் எந்த இரு வார இதழ்களின் வாயிலாக பிரிட்டிஷாரின் கொள்கைகளை எதிர்த்தார்? = மராட்டா மற்றும் கேசரி

தேசிய இயக்கத்தில் பங்கு கொண்டதற்காக திலகர் பிரிட்டிஷாரால் எத்தனை முறை சிறையில் அடைக்கப்பட்டார்? = இரண்டு

கி.பி.1908 ஆம் ஆண்டு 6 ஆண்டு கால சிறை வாசத்திற்காக திலகர் எங்கு கொண்டு செல்லப்பட்டார்? = மாண்ட்லே

எந்த ஆண்டின் போது திலகர் பூனாவில் தன்னாட்சி இயக்கத்தை அமைத்தார்? = கி.பி.1916

'சுயராஜ்யம் எனது பிறப்புரிமை அதை நான் அடைந்தே தீருவேன்' - என்று கூறியவர் யார்? = திலகர்

திலகர் எந்த ஆண்டின் போது கணபதி விழாவை தொடங்கினார்? = கி.பி.1893

எந்த ஆண்டின் போது திலகரால் சத்ரபதி சிவாஜி விழாவானது கொண்டாடப்பட்டது? = கி.பி.1895

### லாலாலஜபதி ராய்:

'பஞ்சாப்பின் சிங்கம்' என பலரால் போற்றப்பட்டவர் யார்? = லாலாலஜபதிராய்

கி.பி.1916 ஆம் ஆண்டு அமெரிக்காவில் தன்னாட்சி கழகத்தை தோற்றுவித்தவர் யார்? = லாலா லஜபதிராய்

எந்த குழுவிற்கு எதிராக போராடி போலீஸ் தடியடி பெற்று உயிர் நீத்தார்? = சைமன் குழு

லாலாலஜபதிராய் இறந்த ஆண்டு எது? = கி.பி.1928 - நவம்பர் 17

மிதவாதியாக தன் வாழ்க்கையை தொடங்கி தீவிரவாதியாக மாறிய தலைவர் யார்? = பிபின் சந்திரபால்

தீவிரவாதியாக இருந்து சிறைவாசத்திற்கு ஆன்மீக குருவாக மாறியவர் யார்? = அரவிந்த கோஷ் (பாண்டிச்சேரியில் தங்கினார்)

இந்திய தேசிய இயக்கத்தில் தீவிரவாதம் தோன்றுவதற்கு முக்கிய காரணம் யாது? = கி.பி.1905 ஆம் ஆண்டு ஏற்பட்ட வங்கப்பிரிவினை

வங்கப்பிரிவினையானது நடைமுறைக்கு வந்த நாள் எப்பொழுது? = 1905 அக்டோபர் 16

'இந்தியாவில் உண்மையான விழிப்புணர்வு வங்கப் பிரிவினைக்குப் பின்புதான் தோன்றியது என்று எழுதியவர் யார்? = காந்தி

தீவிர தேசியவாதிகளின் செயல்பாடுகள் மிதவாதியான யாரை 1906 ஆம் ஆண்டு நடைபெற்ற கல்கத்தா மாநாட்டில் சுயராஜ்யம் குறித்து பேசவைத்தது? = தாதாபாய் நௌராஜி

## சூரத் பிளவு (கி.பி.1907)

எந்த காங்கிரஸ் மாநாட்டில் காங்கிரஸ் கட்சியானது இரண்டாக பிளவு பெற்றது? = கி.பி.1907 - சூரத் காங்கிரஸ் மாநாடு (சூரத் பிளவு எனப்படுகிறது)

சூரத் பிளவு ஏற்படக்காரணம் யாது? = சுதேசி இயக்கம் மற்றும் ஒத்துழையாமை இயக்கத்தை நாடு முழுவதும் நடத்த திட்டமிட்டதை மிதவாதிகள் விரும்பாதது

கி.பி.1907 ஆம் ஆண்டு சூரத் மாநாட்டில் ராஷ்பிகாரி கோஷ் தலைமையில் மிதவாதிகளும், அரவிந்த் கோஷ் தலைமையில் தீவிரவாதிகளும் தனித்தனியாக தீர்மானங்கள் இயற்றியதால் காங்கிரசில் பிளவு ஏற்பட்டது

கி.பி.1907 ஆம் ஆண்டு நடைபெற்ற இந்திய தேசிய காங்கிரஸ் மாநாட்டிற்கு தலைமை வகித்தவர் யார்? = ராஷ்பிகாரி போஸ்

## முஸ்லீம் லீக் கட்சி (கி.பி.1906):

எந்த ஆண்டின் போது அகில இந்திய முஸ்லீம் லீக் கட்சியானது தோற்றுவிக்கப்பட்டது? = கி.பி.1906 - டிசம்படர் 30

கி.பி.1906 டிசம்பரில் இந்தியாவிலிருந்து முஸ்லீம்கள் முஸ்லீம் கல்வி மாநாட்டில் கலந்து கொள்வதற்காக எந்த நகரில் கூடியிருந்தனர்? = டாக்கா

முஸ்லீம்களின் நலன்களுக்காக ஒரு அமைப்பு உருவாக்கப்பட வேண்டும் என்ற கருத்தை முதன் முதலில் வெளியிட்டவர் யார்? = நவாப் சலி முல்லா

எந்த ஆண்டு காங்கிரஸ் மாநாட்டின் போது பிரிந்த காங்கிரஸ் கட்சியானது மீண்டும் ஒன்று இணைந்தது? = கி.பி.1916

லக்னோ ஒப்பந்தம் கையெழுத்தான ஆண்டு எது? = கி.பி.1916

எந்த ஒப்பந்தமானது இந்து-முஸ்லீம் ஒற்றுமைக்கு சாதகமாக எடுக்கப்பட்ட முக்கிய முடிவாகும்? = லக்னோ ஒப்பந்தம்

அலிகார் முஸ்லீம் பல்கலைக்கழகம் தொடங்கப்பட்ட ஆண்டு யாது? = கி.பி.1920

## தன்னாட்சி கழகம் (கி.பி.1916):

கி.பி.1916 ஆம் ஆண்டு மொத்தம் எத்தனை இடங்களில் தன்னாட்சி கழகமானது தொடங்கப்பட்டது? = இரண்டு (புனே மற்றும் சென்னை)

கி.பி.1916 ஆண்டு புனேவில் தன்னாட்சி கழகத்தை தோற்றுவித்தவர் யார்? = திலகர்

கி.பி.1916 ஆம் ஆண்டு சென்னையில் தன்னாட்சி கழகத்தை தொடங்கியவர் யார்? = அன்னி பெசண்ட் அம்மையார்

கி.பி.1915 ஆண்டு செப்டம்பர் மாதத்தில் எந்த இதழியில் அன்னிபெசன்ட் அவர்கள் தன்னாட்சி இயக்கம் தொடக்கம் போவதாக முடிவை அறிவித்திருந்தார்? = நியூ இந்தியா

தன்னாட்சி கழகத்தின் முக்கிய குறிக்கோள் யாது? = பிரிட்டிஷ் பேரரசுக்குள்ளேயே இந்தியாவுக்கு தன்னாட்சி வழங்குவது

எந்த இயக்கமானது மீண்டும் இந்திய தேசிய இயக்கத்திற்கு உயிர் கொடுத்தது என கூறப்படுகிறது? = தன்னாட்சி இயக்கம்

தன்னாட்சி இயக்கத்தின் முதல் பொதுச்செயலாளர் யார்? = ராமசாமி ஐயர்

ஆகஸ்ட் அறிக்கை வெளியிடப்பட்ட ஆண்டு எது? = கி.பி.1918 - ஆகஸ்ட் 20

ஆகஸ்ட் அறிக்கையை வெளியிட்டவர் யார்? = இங்கிலாந்து அயலுறவு அமைச்சர் மாண்டேகு

தன்னாட்சி இயக்கத்தை முடிவுக்கு கொண்டு வந்த அறிக்கை எது? = ஆகஸ்ட் அறிக்கை

அன்னிபெசண்ட் காமன் வீல் என்ற வாரப்பத்திரிக்கையை தொடங்கிய ஆண்டு எது? = கி.பி.1913

அன்னிபெசண்ட் நியூ இந்தியா என்ற தினசரி நாளேடை தொடங்கிய ஆண்டு எது? = கி.பி.1914

## புரட்சி இயக்கங்கள்:

முதலாம் உலகப் போரின் முடிவில் பிரித்தானிய இந்தியாவில் குறிப்பாக எந்த இரு இடங்களில் அதிக எண்ணிக்கையிலான புரட்சி இயக்கங்கள் தோன்றியது? = பஞ்சாப் மற்றும் வங்காளம்

வங்காளத்தில் நிருவப்பட்ட இரு இரகசிய இயக்கங்கள் எது? = அனுசிலான் சமிதி மற்றும் ஜீகந்தர்

'அபினவ பாரத் சங்கத்தை' - தோற்றுவித்தவர்கள் யார்? = சவார்க்கர் சகோதரர்கள் - மகாராஷ்டிரம்

சென்னை மாகாணத்தில் பாரத மாதா சங்கத்தை தோற்றுவித்தவர் யார்? = நீலகண்ட பிரம்மச்சாரி

காதர் கட்சியை தோற்றுவித்தவர் யார்? = லாலாஹர் தயாள்

காதர் கட்சியானது எங்கு தோற்றுவிக்கப்பட்டது? = அமெரிக்கா

தேசிய இயக்கத்தை மக்கள் இயக்கமாக மாற்றியவர் யார்? = காந்தி

காந்திய அவர்கள் இங்கிலாந்தில் படித்து விட்டு எந்த ஆண்டின் போது இந்தியாவிற்கு திரும்பி வந்தார்? = கி.பி.1891

காந்தி தென் ஆப்பிரிக்கா சென்ற ஆண்டு எது? = கி.பி.1893

தென் ஆப்பிரிக்காவிலிருந்து இந்தியா திரும்பிய ஆண்டு எது? = கி.பி.1915

எந்த ஆண்டின் போது காந்தி பீகாரில் சம்ப்ரான் என்ற இடத்தில் ஐரோப்பிய அவுரிச்செடி பண்ணையாளர்களுக்கெதிரான போராட்டத்தில் கலந்து கொண்டார்? = கி.பி.1917

எந்த இடத்தில் காந்தி அவர்கள் சத்யா கிரகம் என்ற அறப்போராட்டத்தை முதன் முறையாக இந்திய மண்ணில் பரிசோதித்து பார்த்தார்? = சம்ப்ரான்

குஜராத்தின் எந்த மாவட்டத்தில் மோசமான விளைச்சலால் பாதிக்கப்பட்ட குடியானவர்களுக்கு நிலவரியிலிருந்து வில்லக்க அளிக்க காந்தி மற்றொரு சத்யா கிரகத்தை நடத்தினார்? = கேடா

எந்த போராட்டத்தின் போது சர்தார் வல்லபாய் படேல் காந்தியின் நம்பிக்கைக்குரிய சீடர்களில் ஒருவராக எழுச்சி பெற்றார்? = கேடா போராட்டம் - குஜராத்

கி.பி.1918 ஆம் ஆண்டு எந்த கோரிக்கையை ஆதரித்து சாகும்வரை உண்ணாவிரதத்தை காந்தி மேற்கொண்டார்? = அகமதாபாத் ஆலை தொழிலாளர்கள் கோரிக்கை

## ரௌலட் சட்டம் (கி.பி.1919):

அரசுக்கு எதிரான சதி வேலைகளை ஆய்வு செய்வதற்காக சர் சிட்னி ரௌலட் என்பவரது தலைமையில் எந்த ஆண்டின் போது ஒரு குழு அமைக்கப்பட்டது? = கி.பி.1917

எந்த ஆண்டின் போது ரௌலட் சட்டமானது மத்திய சட்டசபையில் கொண்டுவரப்பட்டது? = கி.பி.1919

கருப்புச் சட்டம் என கருதப்பட்ட சட்டம் எது? = ரௌலட் சட்டம்

ரௌலட் சட்டத்தை பிறப்பித்த தலைமை ஆளுநர் யார்? = மாண்டேகு செம்ஸ்போர்டு பிரபு

எத்தனை ஆண்டுகளுக்கு நீதிமன்ற வழக்கு விசாரணை இன்றி சிறை வைக்க ரௌலட் சட்டமானது அரசுக்கு அதிகாரம் அளித்தது? = இரண்டு ஆண்டுகள்

ரௌலட் எதிர்த்து போரிட்ட யார் அமிர்தசரஸில் கைது செய்யப்பட்டவர்கள் யார்? = டாக்டர் சத்யபால் மற்றும் டாக்டர் சைபுதீன் கிச்லு

ரௌலட் சட்டமானது திரும்ப பெறப்பட்ட ஆண்டு எது? = கி.பி.1922

## ஜாலியன் வாலாபாக் படுகொலை (கி.பி.1919 - ஏப்ரல் 13):

பஞ்சாப் அரசாங்கம் எந்த ஆங்கில தளபதியிடம் தன் ஆட்சி பொறுப்பை ஒப்படைத்தது? = ஜெனரல் ஓ டையர்

எந்த திருநாளின் போது கி.பி.1919 ஏப்ரல் 13 அன்று ஜாலியன் வாலாபாக் பூங்காவில் பொதுக் கூட்டமானது கூட்டப்பட்டது? = பைசாகி திருநாள்

ஜாலியன் வாலாபாக் படுகொலையில் மொத்தம் கொல்லப்பட்டவர்கள் எத்தனை பேர்? = 379

ஜாலியன் வாலாபாக் படுகொலையில் படுகாயமடைந்தவர்கள் எத்தனை பேர்? = 1137

எந்த படுகொலையால் ரவீந்திரநாத் தாகூர் தாம் பெற்ற நைட் பட்டத்தை துறந்தார்? = ஜாலியன் வாலாபாக் படுகொலை

ஜாலியன் வாலாபாக் படுகொலை பற்றி விசாரிக்க நியமிக்கப்பட்ட குழுவின் பெயர் யாது? = ஹண்டர் கமிட்டி

## கிலாபத் இயக்கம் (கி.பி.1920)

கிலாபத் இயக்கத்திற்கு காரணம் யாது? = முதல் உலகப்போரில் துருக்கி தோல்வியுற்றது

முதல் உலகப்போரின் இறுதியில் துருக்கியுடன் ஏற்பட்ட உடன்படிக்கை யாது? = செவெரஸ் உடன்படிக்கை

கிலாபத் இயக்கத்தை தலைமையேற்று நடத்தியவர்கள் யார்? = மௌலானா அபுல்கலாம் ஆசாத், எம்.ஏ.அன்சாரி, சைபுதீன் கிச்லு, அலி சகோதரர்கள்

கிலாபத் தினம் அனுசரிக்கப்பட்ட நாள் எது? = கி.பி.1919 அக்டோபர் 19

எந்த ஆண்டின் போது காந்தி தலைமையில் இந்துக்களும் முஸ்லீம்களும் கலந்து கொண்ட மாநாடானது கூடியது? = கி.பி.1919 - நவம்பர் 23

எந்த ஆண்டின் போது கிலாபத் இயக்கமானது காந்தி தொடங்கிய ஒத்துழையாமை இயக்கத்துடன் ஒன்று சேர்ந்தது? = கி.பி.1920

நன்றி - பழனி முருகன்